பக்கங்கள் : பதினெட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

மலர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 11 சனிக்கிழமை (27.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :274

## ஜே.வி.பியினருக்கு எதிராக நேற்று ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்!

### நூற்றுக்கணக்கானோர் திரண்டனர்


கொழும்பு, ஓக. 27

'சுடர் ஒளி' செய்தியாளர் ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. பல நூற்றுக்கணக்கான தமிழ், சிங்கள, முஸ்லிம் பத்திரிகையாளர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன், மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன், அக்கட்சியின் பிரதித் தலைவர் குமரகுருபரன், மேல் மாகணசபை உறுப்பினர் வேலணை வேணியன், தமிழ்க் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு, ஜே.வி.பியின் அராஜகத்தைக் கண்டித்ததுடன் பத்திரிகையாளர்களுக்குத் தமது ஆதரவையும் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் கோட்டை ரயில் நிலையம் முன்பாக பத்திரிகையாளர்களின் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்

(18ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகைத் திருவிழா நேற்று மாலை பெருந்திரளான அடியார் கூட்டத்தின் மத்தியில் நடைபெற்றது.

அழகிய பூஞ்சப்பரத்தில் சுவாமி எழுந்தருளி வீதியுலா வந்த காட்சி இது.

(படம்:- பகீரதன்)

# இந்த ஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தல்

## சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலம் 1999இல் ஆரம்பம் என நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 27

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நீண்ட நாள்களாக நிலவிவந்த சர்ச்சை நேற்றுடன் முடிவுக்கு வந்தது. 1999ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22ஆம் திகதியில் இருந்தே தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாகிறது என்று உயர் நீதிமன்றம் நேற்றுத் திட்டவட்டமாக தெரிவித்துத் தீர்ப்பளித்தது. இதன் மூலம் இந்த ஆண்டே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை அது தெளிவுபடுத்தியுள்ளது.**

**நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புப்படி ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலம் இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 22ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அதற்கு முன்னர் ஒரு மாதத்துக்குக் குறையாத காலப்பகுதிக்குள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவுள்ளார்.**

ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலம் எப்போது ஆரம்பமாகிறது என்பதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அவரது பதவிக்காலம் முடிவடையும் திகதி பற்றிய சர்ச்சை ஏற்பட்டது. இதனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டா அல்லது அடுத்த ஆண்டா என்ற கேள்வி எழுந்தது.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்

(18ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி - பிரதமர் திடீரென நேற்று மந்திராலோசனை

கொழும்பு,ஓக.27

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான முக்கியமான பேச்சு ஒன்று நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்தப் பேச்சில் நேற்று வழங்கப்பட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பு, ஜனாதிபதித் தேர்தல் என்பன பற்றி விரிவாக ஆரா

(18ஆம் பக்கம் பார்க்க)

### பதில் பொலீஸ் அத்தியட்சகர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.27

கொலைசெய்யப்பட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் இடத்துக்கு விரைவில் புதியவர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று யாழ். பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் பதில் பொலீஸ் அத்தியட்சகராக பிரியந்த என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். பெரும்பாலும் இவரே சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகராக நியமிக்கப்படலாம் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-13)

### இரத்மலானையில் தேடுதல்

கொழும்பு,ஓக.27

கொழும்பின் புறநகர் பகுதியான இரத்மலானையில் உள்ள விமானப் படைத்தளத்தைச் சூழவுள்ள பகுதிகளில் இராணுவத்தினர், விமானப்படையினர் மற்றும் பொலீஸார் இணைந்து கூட்டாக மேற்கொண்ட தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 46 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் ஆரம்பித்த இந்த நடவடிக்கைநேற்று அதிகாலை வரை தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் இயக்கம் மீதான சர்வதேச மதிப்பைச் சிதைக்க

# கதிர்காமரின் மரணத்தை வைத்து பிண அரசியல் நடத்துகிறது அரசு

### 'விடுதலைப் புலிகள்' ஏடு சாடல்

கிளிநொச்சி,ஓக.27

சிவில் உடையில் இராணுவப் பணிகள் புரிந்த சிங்கள அரசின் போர் அமைச்சராகவே கதிர்காமரை தமிழர்கள் பார்க்கிறார்கள். இன்று புலிகள் இயக்கம் மீதான சர்வதேச மதிப்பைச் சிதைக்கும் அரசியல் சூழ்ச்சியுடனேயே கதிர்காமரின் கொலைக்கான பழியை புலிகள் இயக்கம்மீது சுமத்த சிங்கள அரசு முனைகிறது.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கின்றது விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடாகிய 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம்.

(18ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியத் தலைவர்களுடன் அநுரா நேற்றுச் சந்திப்பு

கொழும்பு,ஓக.27

தடைப்பட்டுள்ள இலங்கை அமைதி முயற்சிகளை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பாக இந்தியா வழங்கவேண்டிய ஒத்துழைப்பு குறித்து வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, இந்தியத் தலைவர்களுடன் நேற்று புதுடெல்லியில் கலந்துரையாடியிருக்கிறார்.

நல்லெண்ண விஜயமொன்றை

(18ஆம் பக்கம் பார்க்க)



# தேர்தல் திகதியை உடன் அறிவித்துவிட முடியாது!

### ஆணையாளர் திஸநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக.27

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நடைபெறுவது திட்டவட்டம். ஆனாலும் உடனடியாகத் தேர்தல் திகதியை அறிவிக்கமுடியாது.


-இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பின்னர் செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே தேர்தல் ஆணையாளர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறுமென்று உயர்நீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியதையடுத்து நேற்று முற்பகல் கொழும்பின் பல பாகங்களிலும் ஐக்கிய

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மறைந்த பேராசான் சிவராமலிங்கத்தின் இறுதிக்கிரியைகள் நேற்று குமாரசாமி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன. அவரது பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதை முதல் படத்தில் காணலாம். தகனக் கிரியைக்காக அவரது பூதவுடல் தாங்கிய பேழை தாங்கிச் செல்லப்படுவதை இரண்டாவது படத்திலும் - யாழ். இந்துக் கல்லூரியின் முன்பாக அஞ்சலிக்காக பூதவுடல் தாங்கிய ஊர்தி நிறுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுவதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்:- பகீதரன்)

# ஜனநாயகம் காப்பாற்றப்பட்டு விட்டது ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கருத்து

கொழும்பு,ஓக.27

நாட்டில் ஜனநாயகம் காப்பற்றப்பட்டு விட்டது. அரசியல் அமைப்பை மதித்து உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்திவிட்டது என ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய சில நிமிடங்களில் ஜனாதிபதி வேட்பாளர்களான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஐ.தே.க. தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்துவிட்டனர்.

முதலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சபைக்குள் வந்தார். அப்போது சபை முதல்வர் உயர் நீதிமன்றத் தீர்ப்பை சபையில் அறிவித்துக்கொண்டிருந்தார்.

இதோ எங்களுடைய ஜனாதிபதி வந்துவிட்டார் என ஆளும்கட்சி உறுப்பினர்கள் ஒரே குரலில் கோஷமிட்டனர். நான் முந்தி நீ முந்தி என முண்டியடித்துக்கொண்டு பிரதமருக்கு கைகொடுத்து வாழ்த்தும் தெரிவித்தனர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கையை உயர்த்தி மகிழ்ச்சி தெரிவித்த வண்ணம் சபைக்குள் பிரவேசித்தார். அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் மேசைகளைத் தட்டி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். இதனால் சபை மகிழ்ச்சி ஆரவாரத்தால் அமளிதுமளிப்பட்டது. ஆரவாரங்கள் அடங்க சில நிமிடங்கள் எடுத்தன.

சபை அமைதியடைந்த பின் ஐ.தே.க. பிரதித் தலைவர் கருஜயசூரிய உரையாற்றினார். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுவிட்டது. ஐ.தே.கட்சி நாட்டு மக்களின் ஒன்றுபட்ட சக்தியுடன் நடத்திய போராட்டத்திற்கு வெற்றி கிடைத்துவிட்டது. மக்கள் போராட்டத்தின் வெற்றி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை ஊர்ஜிதப்படுத்திவிட்டது. எங்களுடைய கட்சி அரசமைப்பையும், ஜனநாயகத்தையும் மதிக்கும் ஒரு கட்சி. எப்போதுமே நீதியும் ஜனநாயகமும் வெற்றியடையும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

அரசமைப்பின்படி 2005ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்த ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர் வண. ஓமல்பே சோபித்த தேரருக்கு நன்றி செலுத்தும் அதே வேளை, அதே கோரிக்கையை வலியுறுத்தி ஐ.தே.கவுடன் இணைந்து மக்கள் எழுச்சிப் புனித பாத யாத்திரையில் கலந்துகொண்டும் தேர்தல் ஆணையாளருக்கான மகஜரில் கையெழுத்திட்டும் பக்கபலமாக இருந்த நாட்டு மக்களுக்கும் நன்றி செலுத்த எமது கட்சியினர் கடமைப்பட்டுள்ளோம்.

எந்தவிதமான அழுத்தங்களுக்கும் இடமளிக்காமல் அரசமைப்பின்படி தனது கருத்தை உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்த தேர்தல் ஆணையாளருக்கும், சுதந்திரமாகவும் துணிச்சலாகவும் தீர்ப்பு வழங்கிய உயர் நீதிமன்றத்திற்கும் ஐ.தே.கட்சி தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

அதேவேளை, நாட்டின் அரசமைப்பையே தவறான வழியில் வியாக்கியானம் செய்து சுயநல நோக்கத்திற்காக நாட்டு மக்களையே இது திருப்ப முனைந்த ஜனநாயக விரோதிகளுக்கும் இது ஒரு பாடமாக அமையட்டும் - என்று சபையில் தெரிவித்தார்.

### அரச தரப்பினரின் திடீர் பல்டி

உயர்நீதிமன்ற தீர்ப்பு வெளியாகும்வரை 2006ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவோம். அதுவரை சந்திரிகா குமாரதுங்க தான் ஜனாதிபதி. இதை எவராலும் மாற்றமுடியாது என்று கூறிவந்தனர் அரச தரப்பினர். ஆனால், நேற்று திடீர் பல்டி அடித்துவிட்டனர். தேர்தல் இந்த ஆண்டு நடந்தால் அதை எதிர்கொள்ளத் தாம் தயார் என்றனர்.

### சபை முதல்வரின் ஆவேசம்

கருஜயசூரிய எம்.பி. உரையாற்றிய பின் சபை முதல்வரும், அமைச்சருமான நிமால் சிறி பால டி சில்வா உரையாற்றினார்.

"நாங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறோம். அரச அமைப்பின் படியே உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. அதனை மதிக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்று நாங்கள் நீதிபதிகளின் வீடுகளுக்கு கல் எறியமாட்டோம்.

"உயர்நீதிமன்றம் தனது சுதந்திரத்தைப் பயன்படுத்தி, அரசமைப்புக்கு இணங்கவே தீர்ப்பு வழங்கி உள்ளது. ஐ.தே.கவின் மக்கள் சக்தி பாத யாத்திரைக்கோ, கையெழுத்துப் போராட்டத்திற்கோ கிடைத்த வெற்றியல்ல இது. - என்று ஆவேசமாகக் கூறினார் சபை முதல்வர் நிமால் சிறி பால டி சில்வா.

### ஸ்ரீ.ல.சு.கட்சி செயலாளரின் மனு என்ன ஆனது?

சபை முதல்வர் நிமால் சிறிபாலவின் பேச்சுக்கும் பதிலடி கொடுத்தார் ஐ.தே.க. எம்.பியான காமினி லொக்குகே. "இப்பொழுது அரசமைப்பை மதிப்பதாகக் கூறுகின்றீர்கள். அப்படியானால் அரசமைப்பையே திரித்து 2006 ஆம் ஆண்டில்தான் தேர்தல் நடத்தவேண்டும் என ஸ்ரீல.சு.கட்சி செயலாளர் மைதிரிபால சிறிசேன உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனுவுக்கு என்ன ஆனது? அதன் அர்த்தம் என்ன?" - இப்படி காமினி லொக்குகே கேட்டார். அப்போது அமைச்சர்கள் மைதிரிபால சிறிசேன சபையில் இருந்தபோதும் அதற்கு உதவியான பதிலும் அளிக்கவில்லை.

### ரணில் மட்டுமே ஜனாதிபதி வேட்பாளர்

இந்தச் சந்தர்ப்பத்தில் முன்னாள் சபாநாயகர் ஜோஸப் மைக்கல் பெரேரா மற்றும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

"ஸ்ரீ.ல.சு.கட்சித் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற கட்சியின் அதிஉயர் கூட்டத்திலும் பொதுச் சபையிலும் 2006ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ என தீர்மானிக்கப்பட்டது. அப்படியானால் 2005ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே ஏகவேட்பாளர். அவருடைய வெற்றி நிச்சயிக்கப்பட்டுவிட்டது."- என்றார் ஜோசப் மைக்கல் பெரேரா. எதிர்க்கட்சியினர் அப்போது மேசைகளைத் தட்டி தமது சந்தோஷத்தை வெளிப்படுத்தினர்.

அப்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சிரித்துக்கொண்டே சபையில் அமர்ந்திருந்தனர். அவர்கள் எந்தவிதமான கருத்தையும் வெளிப்படுத்தவில்லை.

# தூவல் நீர்ப்பாசனம் தொடர்பாக நேற்று பயனுள்ள கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.27

தூவல் முறை நீர்ப்பாசனம் தொடர்பான கருத் தரங்கு ஒன்று நேற்று திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தியா 'ஜெயின் இரிகேஷன் ஸிஸ்டம்ஸ்' நிறுவனம், கொழும்பு ஜினசேன நிறுவனம், கிளிநொச்சி, வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியன இணைந்து இக்கருத்தரங்கை நடத்தின.

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா தலைமையில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் இந்தியா ஜெயின் இரிகேஷன் ஸிஸ்டம்ஸ் நிறுவன பொறியியலாளர் பாலசுப்பிரமணியம் கருத்துரையை வழங்கினார். வீடியோ விளக்கப் படங்களின் உதவியுடன் தெளிவான விரிவுரையை அவர் வழங்கினார்.

இந்நிகழ்வில் விவசாய உத்தியோகத்தர் கி.சிறிபாலசுந்தரம், வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன பொறியியல் பகுதிமேலாளர் வ.மாணிக்கம், ஜினசேன நிறுவன நீர்வழங்கல் பகுதி முகாமையாளர் அஜித் சில்வா மற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள விவசாயப் பயிற்சி நிலையத்திற்கு ஜினசேன நிறுவனம், வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியன இணைந்து வழங்கிய தூவல் சொட்டுநீர் வழங்கல் கருவித் தொகுதி ஆரம்பித்துவைக்கப்பட்டது. இக் கருவியின் செயற்பாடு பற்றி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் விளக்கிக் காட்டப்பட்டது. இதனையடுத்து கலந்துகொண்ட அனைவருக்கும் மதியபோசனமும், நினைவுப் பரிசுகளும் ஜினசேன நிறுவனத்தால் வழங்கப்பட்டன. இறுதியாக ஜினசேன நீர் வழங்கல் பகுதி முகாமையாளர் அஜித்சில்வா நன்றியுரை நிகழ்த்தினார். (ஐ-12)

# மெலிஞ்சிமுனையில் மனித எலும்புக்கூடு மீட்பு!

யாழ்ப்பாணம்,ஓக27

ஊர்காவற்றுறை- மெலிஞ்சி முனைப் பகுதியில் உள்ள மலசல கூடக் குழியில் இருந்து மனித எலும்புக் கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருட காலமாக கைவிடப்பட்டிருந்த வீடொன்றையும் அந்த வீட்டு வளவில் உள்ள மலசலகூடத்தையும் துப்புரவு செய்ய முயன்றோரே இந்த எலும்புக் கூட்டை கண்டுபிடித்துள்ளனர்.

மேற்படி மலசலகூடக் குழியில் எலும்புக் கூடு காணப்பட்டமை தொடர்பாக உடனடியாக அப்பகுதி கிராம அலுவலருக்கு முதலில் முறைப்பாடு செய்யப்பட்டது.

கிராம அலுவலர் எஸ்.கணபதிப்பிள்ளை மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இடத்துக்கு உடனடியாக விஜயம் செய்து விசாரணை நடத்தினர். இதனைத் தொடர்ந்து இதுவிடயமாக ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)

## பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம்,ஓக.26

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கொழும்பிலுள்ள மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் திருமதி வி.நரேந் திரன் கலந்துகொள்வார். (3-203)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ். வலய கோப்பாய்ப் பிரதேச நீர்வேலி குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

குடும்ப முன்பள்ளி தலைவி திருமதி மனோகரன் சகுந்தலாதேவி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நீர்வேலி பிரதேச சபை செயலாளர் த.நடராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-204)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.27

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தின் மனித உரிமையைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான வலையமைப்பை ஸ்தாபிக்கும் திட்டத்தின்கீழ் கரிதாஸ் - கியூடெக் நிறுவனத்தின் மனித உரிமைகள் பிரிவினர் நடத்தும் இடம்பெயர்ந்தோருக்கான மனித உரிமைகள் விழிப்புணர்வுக் கருத்தமர்வும் நடமாடும் சேவையும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் வண.பிதா கி.ஜோ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் சட்டத்தரணி நிரஞ்சன் பிரதான சொற்பொழிவு ஆற்றுவார். (3-190)

# வடமராட்சியில் நாளை இலவச மருத்துவ முகாம்

வடமராட்சி,ஓக.27

வியாபாரிமூலை, சுப்பர்மடம், தம்பசிட்டி, திருநாவலூர் ஆகிய கிராம மக்களின் வசதி கருதி வடமராட்சி லயன்ஸ் கழகம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இலவச மருத்துவ சேவையை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த இலவச மருத்துவ சேவையின்போது பொது மருத்துவ சிகிச்சையினை லண்டனில் இருந்து தாயகம் வந்துள்ள டாக்டர் எஸ்.சசிகாந்த், கொழும்பு [illegible] சேர்ந்த டாக்டர் [illegible] பற்சிகிச்சையினை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பல் டாக்டர் எஸ்.நிரஞ்சனும், குழந்தை மருத்துவ சிகிச்சையினை லண்டனிலிருந்து வருகைதந்துள்ள டாக்டர்கள் ரிறிஸ்டன்பாடே, ஜெஸ்ஸீபாடே ஆகியோரும் மேற்கொள்வார்கள். குழந்தை மருத்துவ சிகிச்சைக்கு ஆஸ்திரேலியா செஞ்சிலுவைச் சங்க சுகாதாரத் தொண்டரான ஹெரி பாக் என்பவரும் உதவிபுரிவார்.

அத்துடன், கண்பரிசோதனை செய்யப்பட்டு இலவசக்கண்ணாடிகள் வழங்கப்படுவதுடன் குருதி அமுக்கம், சிறு நீர்ப்பரிசோதனை என்பனவும் பொது மக்களுக்கு [illegible] வழங்கப்படும் என வடமராட்சி [illegible] செயலாளர் எஸ்.துரைசிங்கம் தெரிவித்தார். (ஐ-173)

## சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் சிறுவர் இல்லங்களைப் பதிவுசெய்தல், செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் போன்ற விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் -- 222 2030, 222 2083, 222 3837.

# ஜனாதிபதித் தேர்தலும் ஒப்பந்தப் பேச்சும்

ஜனாதிபதித் தேர்தல் எப்போது? - இந்த வருடத்திலா அல்லது அடுத்த வருடத்திலா?

கடந்த சில மாதங் களாக நிலவிய இந்தக் கேள்விக்கும் அது தொடர்பான சர்ச்சைக்கும் வாக்குவாதங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்புடைய வழக்கில் உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பு, தெற்கின் அரசியல் அரங்கில் பெரும் 'களேபரத்தை' உண்டாக்கிய குழப்பத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

அரசமைப்பு விதிகளின் பிரகாரம், ஆகக் கடைசியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் திகதியின் அடிப்படையில் சந்திரிகா அம்மையாரின் பதவிக் காலம் இவ் வருடம் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதியுடன் பூர்த்தியாகின்றது. ஆகையால், புதிய ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்றாகவேண்டும்.

ஆனால், இரண்டாவது பதவிக் காலத்தைத் தொடங்குவதற்காக, சடங்கு, சம்பிரதாயம் எதுவும் இன்றி அமைச்சரவைக்கே தெரியாமல், ஜனாதிபதி (இரகசியமாக) 2000ஆம் ஆண்டு நவம்பரில் பதவியேற்றார் என்ற புதிய தகவல் மிகச் சமீபத்தில் அரசாங்கத் தரப்பினரால் கசியவிடப்பட்டது.

அதன் விளைவாகவே, ஜனாதிபதித் தேர்தல் ஒரு விவகாரமாகி நீதிமன்றம்வரை சென்றது. வழக்கு வந்ததால் இதுகுறித்த தேர்தல் ஆணையாளரின் நிலைப்பாடு - கருத்து - முக்கிய இடத்தைப் பெற்றது. அவர் தமது மனச்சாட்சிப்படி - நீதிக்கும் நியாயத்துக்கும் ஊறு செய்யாமல் - செயற்பட்டார்.

சந்திரிகாவின் பதவிக் காலம் 1999 டிசெம்பர் 22ஆம் திகதியே ஆரம்பித்ததாக அவர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார். அதனை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடத்திலேயே நடத்தப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதாவது -

நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையாளரின் சுதந்திரமும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அரசமைப்பு அதிகாரங்கள் செவ்வனே கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. தெற்கின் பெரும்பாலான மக்களின் விருப்பமும் கைகூடியுள்ளது.

ஆனால்...

ஜனாதிபதி சந்திரிகாவிடம் அளவுக்கு அதிகமான - மிதமிஞ்சிய - அதிகாரங்கள் உள்ளன. ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மட்டுமே மாற்ற முடியாது; ஏனைய சகல அதிகாரங்களும் இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதிக்கு உண்டென 'நக்கலாக' - நையாண்டியாக - கூறப்படுவது வழக்கம்!

அந்தளவுக்கு அதிகாரங்களை கையில் வைத்துள்ள சந்திரிகாவின் - அவசரகாலச் சட்டத்தை பல உள்நோக்கங்கள், திட்டங்களுடன் நடைமுறைப்படுத்தி மேலதிகமாகச் சேர்த்திருக்கும் சந்திரிகாவின் - அடுத்த நகர்வு எப்படி அமையப்போகின்றது என்பதே தெற்கு மக்களின் நேற்றைய உடனடி வினாவாக இருந்தது!

அது ஒருபுறம் இருக்கட்டும்.

தமக்குள்ள அதிகாரங்களின் பிரகாரம் புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் வெளியிடும் பட்சத்தில் -

மிகவும் நெருக்கடிக்குள்ளாகிவிட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு உண்டாகியுள்ள உயிர் ஆபத்தை நீக்குவதில் அரசாங்கம் உட்பட தெற்கின் அரசியல் தலைமைகள் அக்கறை காட்டுமா என்ற சந்தேகமே தமிழ் மக்கள் மனங்களில் எழும்.

தெற்கின் அரசியல் தலைமைகளின் கவனம் ஜனாதிபதித் தேர்தல் பக்கமே முழுக்க முழுக்கச் செறியும். எப்பாடுபட்டும், என்ன பொய்யைச் சொல்லியும் தமது தரப்பு வேட்பாளர் வென்றுவிட உழைப்பதிலேயே இரண்டு பிரதான தரப்பாரும் மனங்கொள்வர்; மிகத் தீவிரமாகச் செயற்படுவர்.


இதனைத் தருணமாக - மிகவும் அரிய வாய்ப்பாக - கொண்டு தெற்கின் அந்த இரண்டு தரப்புகளும் ஊட்டி வளர்த்துவிட்ட படைகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை போட்டுடைக்கமாட்டா என்பதற்கு என்ன உத்தரவாதம்? அவ்வாறு படையினர் செயற்படமாட்டார்கள் என்பதற்கான உறுதியை ஜனாதிபதியும் அவரது ஆளும் தரப்பினரும் வழங்குவர் என்று எதிர்பார்க்க இயலுமா?

அல்லது, தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் போர்நிறுத்தத்தைச் செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கான அரசு - புலிகள் பேச்சைத் தொடங்க அரசு விரைந்து செயற்படுமா? அவ்வாறு செயற்பட்டாலும் தேர்தல் காலத்திற்கு முன்னர் நல்ல பெறுபேறுகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாமா?

இவை எல்லாவற்றுக்கும் விடை தரவேண்டியவர் ஜனாதிபதி சந்திரிகாவே. அவர் தம்மிடம் குவிந்துள்ள - மிதமிஞ்சிய - அதிகாரங்களை ஜனநாயகத்துக்கு எதிராக ஏவாதிருப்பின் மட்டுமே மக்கள் எதிர்பார்க்கும் வகையிலான பெறுபேறுகள் சாத்தியப்படும்.

தமது கட்சி வேட்பாளர் வெல்லவேண்டும் என்பதில் அவர் தீவிரமாகச் செயற்படுவராயின், அதனை நோக்கியே தமது அரசியல் குத்துக்கரணங்களையும் குளறுபடிகளையும் தந்திரோபாயங்களையும் செய்வராயின் போர்நிறுத்தம் உயிர் பிழைப்பது அரிதாகிவிடும்.

எது எவ்வாறாகும் என்பதனை அவரது அரசியல் அதிகாரத்தனமான நகர்வுகளே தீர்மானிக்கும்.



யாழ். செயலகத்தில் உள்ளகத் தொலைபேசி வலையமைப்பு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ். அரசஅதிபர் கே.கணேஷ் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வடமாகாண முகாமையாளர் ரி.யோகேந்திரன் ஆகியோர் தொலைத் தொடர்புப் பிரிவை ஆரம்பித்துவைப்பதையும் தொடர்வலையமைப்பிற்கான சாவியினை யாழ். அரசஅதிபரிடம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர் என்.சரவணபவன் கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : பிரபா)*

# மக்களின் தேவைகளை உடன் பூர்த்திசெய்ய செயலகத்தில் உள்ளகத் தொலைபேசி வசதி

## நேற்று வைபவரீதியாக ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.27

மக்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்திசெய்யும் நோக்குடன், யாழ்.மாவட்டச் செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட உள்ளகத் தொலைபேசிச் சேவை நேற்று வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வடமாகாண முகாமையாளர் ரி.யோகேந்திரன் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி இதனை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ். மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எஸ்.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர் என்.சரவணபவன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ். பாஸ்கரன், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, திட்டப் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரன், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் மற்றும் பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியயோர் கலந்துகொண்டனர்.

இந்த உள்ளகத் தொலைபேசி இணைப்பின் மூலம் யாழ்.மாவட்டச் செயலகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளும் ஒருவர் தனது தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டிய பிரிவுப் பொறுப்பாளர்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்ததாவது:-

செயலகத்தில் உள்ளகத் தொலைபேசி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை செயலகப் பணிகளை மேலும் துரிதப்படுத்துவதற்கு உதவியாக அமைந்துள்ளது. இதன்மூலம் பணிகளை உடனுக்குடன் இலகுவாகச் செய்யக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. குறிப்பிட்ட பிரிவுகளுடன் உடனடியாகத் தொடர்புகொண்டு பொதுமக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது எமக்குப் பெரும் வரப்பிரசாதமாகும். - என்றார்.

(8-7)

# குடாநாட்டு அரசினர் ஆஸ்பத்திரிகளில் டாக்டர் பற்றாக்குறை பெரும் பிரச்சினை

## சுகாதாரத் திணைக்கள நிர்வாக அலுவலர் விவரிப்பு

வலி.தென்மேற்கு,ஓக.27

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் ஆளணிப்பற்றாக்குறை குறிப்பாக டாக்டர்கள் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் சி.சிவலிங்கம்.

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையின் விசேட பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் தமது பயிற்சியை முடித்து பட்டம் பெற்று வெளியேறும் டாக்டர்கள் இம்மாவட்டத்தில் கடமையாற்ற முன்வராமல் இருப்பது பெரும் சாபக்கேடாகும். இவர்கள் கொழும்பிலும் தென்னிலங்கை வைத்தியசாலைகளிலும் கடமையாற்ற விரும்புவதால் இம்மாவட்டத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்பமுடியாது பெரும் சிரமப்படவேண்டியுள்ளது. குறிப்பாக தீவகப் பிரதேச வைத்தியசாலைகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

டாக்டர்களின் பற்றாக்குறை காரணமாக பதவியிலிருந்து ஓய்வு பெற்ற டாக்டர்களுக்கு மீள் நியமனத்தை வழங்கி வைத்தியசாலைகளை இயங்கச் செய்யவேண்டிய நிலை இங்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக 70 வயதுக்கும் மேற்பட்ட டாக்டர்களுக்கு மீள் நியமனம் வழங்குவதன் மூலம் கிராமப்புறங்களிலுள்ள வைத்திசாலைகளில் எமது திணைக்களம் சேவையாற்றி வருகின்றது.

மருந்துக் கலவையாளர்களுக்கு இம்மாவட்டத்தில் 26வெற்றிடங்கள் உள்ளன. அதேவேளை - குடும்ப நலசேவை அலுவலர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் இங்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலிடத்தைக் கேட்டுள்ளோம். பண்டத்தரிப்பு வைத்தியசாலையின் அவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம். இங்கு மகப்பேற்று நிலையமும் மற்றும் ஆண், பெண் விடுதிகளும் இயங்க ஆரம்பித்ததும் அம்புலன்ஸ் ஒன்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் - என்றார்.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் செல்வி திருத்தேவி திருநாவுக்கரசு உரையாற்றுகையில்:-

வைத்தியசாலையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறை பற்றியும், ஏனை தேவைகள் பற்றியும் விவரித்துக் கூறினார். முன்னாள் மருந்துக் கலவையாளர் நா.மா. கந்தசாமி, பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் சு.வைரவநாதர் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினர். (எ-135)

### ஆசிரிய மாணவருக்கு சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம்,ஓக.27

கோப்பாய் அரசினர் கலாசலையில் 2004ஆம் ஆண்டு பரீட்சை எழுதிச் சித்தியடைந்த ஆசிரிய மாணவர்களுக்குரிய சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தெரிவித்தார்.

சான்றிதழ்கள் வழங்குவதற்கான வேலைகள் நடைபெற்றுவருகின்றன. எதிர்வரும் முதலாம் திகதி அவற்றை உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என அதிபர் மேலும் தெரிவித்தார். (எ-323)

**உதயவாக்கு**

நிறை கண்டால் போற்று; குறை கண்டால் ஒன்றும் கூறாதே.
- இயேசு.

**நாளை**

ஆவணி 12
ஞாயிற்றுக்கிழமை
28.08.2005
திதி: நவமி
மரணயோகம்
பிற்பகல்: 02.40 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பின்னிரவு 05.43 வரை
சுபநேரம்: 09.05 - 10.35
இராகுகாலம்: 04.35 - 06.05
(யாவும் பழைய நேரப்படி)

# வவுனியா பிரகடனத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் எழுச்சி நிகழ்வு

கிளிநொச்சி,ஓக.27

தமிழ்த் தேசியத்தின் வவுனியா பிரகடனத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் எதிர்வரும் முதலாம் திகதி மக்கள் எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தமிழர் தாயகப் பிரதேசத்தைச் சேர்ந்த பேராளர்கள் கடந்த மாதம் வவுனியாவில் கூடி பிரகடனமொன்றை வெளியிட்டனர்.

ஈழத்தமிழர்களது அரசியல் அபிலாஷைகளை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் -

தவறினால் தமிழர்களின் விடுதலைக்கான போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என்றும்-

அதில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அந்தப் பிரகடனத்தை வலியுறுத்தித் தமிழர் தாயகத்தில் மக்கள் எழுச்சி நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வரிசையில் எதிர்வரும் முதலாம் திகதி கிளிநொச்சியில் மக்கள் எழுச்சி நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இடம் பெறவுள்ள கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானம் அலங்கரிக்கப்பட்டு வருகிறது. அத்துடன், நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள அறிவுஜீவிகள், அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்களுக்கென குடிதண்ணீர் உட்பட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த மக்கள் எழுச்சி நிகழ்விற்குக் கிளிநொச்சி மாவட்ட மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர் என்றும் -

அனைத்துத் தமிழ்மக்களையும் இதில் பங்கேற்குமாறும் - எழுச்சி நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ)

**செப்ரெம்பர் 01 இல்**
**வீறுகொண்ட தமிழினமே**
**விரைந்திடு கிளிநொச்சிக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்பாச்சாரியார் பொற்கிழி வழங்கிக் கௌரவிப்பு

சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலயத்துக்கான புதிய சித்திரத் தேரை உருவாக்கிய பிரதம சிற்பாச்சாரியார் ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஸ் தேர்த்திருப்பணிச் சபையினரால் பொற்கிளி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பிரதம சிற்பாச்சாரியாருடன் இணைந்து தேர் வடிவமைப்புப் பணியில் ஈடுபட்டவர்களும் தேர்முட்டி அமைப்பைச் சீர்ப்படுத்திக் கொடுத்தவரான சண்முகநாதனும் அன்றைய தினம் கௌரவிக்கப்பட்டனர்.

சித்திரத் தேர் வெள்ளோட்டம் நடைபெற்ற வேளை இவர்கள் அனைவரையும் ஆலய போஷகர் பிரம்மஸ்ரீ வா.பாலசுப்பிரமணியக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

தேர் திருப்பணிச் சபைத் தலைவர் சி.பஞ்சாட்சரவேல் பிரதம சிற்பாச்சாரியாருக்குப் பொற்கிளி வழங்கிக் கௌரவித்தார். (எ-152)


### தேவை

Ms Office, தமிழ் Typing தெரிந்த பெண் வரவேற்பாளர் தேவை.
தகைமைச் சான்றிதழ்களுடன் கீழ்க்குறிப்பிட்ட நாளில் நேரில் வரவும்.
1) 29.08.2005 திங்கட்கிழமை காலை 10-12 இற்கு இடையில்
2) 31.08.2005 புதன்கிழமை காலை 10-12 இற்கு இடையிலும்

ACS கணனி கற்கை நிறுவனம்,
மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி.
-இயக்குநர்.
(சி-44810)(21.17.14



துன்னாலை வடக்கு, புலோலி
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்
27.08.2005 (சனிக்கிழமை) இரவு 11 மணி

இந்தியாவில் இருந்து வருகைதந்திருக்கும்- கலைமாமணி - தவில் சக்கரவர்த்தி கரவேகஞான பூபதி- தவில் சுடர் - திருவாவடுதுறை ஆஸ்தான வித்துவான்- மன்னார்குடி M.R. வாசுதேவன் அவர்களின் தவில் கச்சேரி, நாதஸ்வர மேதைகள் M.B.பாலகிருஷ்ணன், L.S.ஜெகநாதன், தவில் மேதை தெட்சணாமூர்த்தி ஆகியோரும் இணைந்து இடம்பெறும்.

அத்துடன் வடமராட்சி வாழ். தவில், நாதஸ்வர கலைஞர்கள்
தவில் வித்துவான் M.R. வாசுதேவன்
அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

(39351)(21.17.14 - பொலிகண்டி மக்கள்.



யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
(நவோதய பாடசாலை)
தரம் 6 ஆங்கிலமொழி மூலம் கற்பதற்கான
விண்ணப்பங்கள் - 2006

தரம் 6இற்கான ஆங்கிலமொழி மூலமான வகுப்புகள் எதிர்வரும் தை 2006 தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன. ஆங்கில மொழி மூலமான கற்கை நெறியினை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் விண்ணப்பிக்கவும்.

தரம் 6 இற்கான (தமிழ்மொழி மூலம்) அனுமதி -2006

2006ஆம் ஆண்டு தரம் 6இற்கான அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தமிழ்மொழி மூலம் பயில விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

மாணவர்களுக்கான ஆண்கள் விடுதி
கல்லூரியின் ஆண்கள் விடுதி மீண்டும் இயங்கவுள்ளதால் விடுதி வசதியினைப் பெற விரும்பும் இப்பாடசாலை மாணவர்களும் புதிதாகச் சேரவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சகல விண்ணப்பங்களுக்குமான முடிவு திகதி 15.10.2005

(சி-44802)(21.17.14
வி.மாணிக்கம்
அதிபர்.



கண்ணீர் அஞ்சலி



செபஸ்ரியான் சகாயம் அருள்ராஜ்
(அருள்)

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'அமுதக்கடல்'
உரிமையாளரும்,
ஊழியரும்.
254, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

'சமுத்திரா ரேட்ஸ்'
உரிமையாளரும்
ஊழியரும்.
141, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

(39348)(21.17.14)



### பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு பணிப்பெண் தேவை. விரும்புவோர் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

40, கண்டி வீதி,
(39346) யாழ்ப்பாணம். (21.14.17)
(இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக)


## பிரிவுபசாரம்

தென்மராட்சி,ஓக.27

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தில் கடமையாற்றி பதவியுயர்வு பெற்றுச் செல்லும் இரு உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார விழா எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு வலய நலன்புரிக்கழகத்தினரால் வலய அலுவலக மண்டபத்தில் கழகத் தலைவர் செ. உதயகுமார் தலைமையில் நடைபெற உள்ளது.

கணக்காளர் நியமனம் பெற்ற சி.கிருபாகரன், மருந்தாளர் நியமனம்பெற்ற எஸ். உமாகாந்தன் ஆகிய இருவருக்குமே பிரிவுபசார விழா நடத்தப்படவுள்ளது. (ஓ-117)

## பரிசில் தினம்

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்.இந்துக் கல்லூரியின் பரிசில் தினம் இன்று சனிக்கிழமை காலை 9.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற விருந்த இந்நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-203)

## ஈரானிய திரைப்படம் நாளை பல்கலையில்

யாழ்ப்பாணம்,ஓக.27

2002 ஆம் ஆண்டு வெனிஸ் திரைப்பட விழாவில் 'தங்கச் சிங்கம்' விருது பெற்ற 'த சேக்கிள்' எனும் ஈரானியத் திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது.

ஜஃவார் பனஹி இயக்கியுள்ள இத்திரைப் படக்காட்சியை இலவசமாகக் காண்பிப்பதற்குப் பல்கலைக்கழகத் திரைப்பட வட்டம் ஒழுங்கு செய்துள்ளது. (3-203)

## ஆன்மீகக் கல்வி குறித்த பயிற்சி

கோப்பாய்,ஓக.27

கோப்பாய் ஸ்ரீ சத்திய சாயி பாபா மனித மேம்பாட்டுக் கல்வி நிறுவனத்தில் மேலும் ஒரு தொகுதி ஆசிரியர்களுக்கான "மனித மேம்பாட்டுடன் இணைந்த ஆன்மீகக்கல்வி" பற்றிய பயிற்சிச் செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிச் செயலமர்வில் யாழ். மாவட்ட பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 35 ஆசிரியர்கள் கலந்துகொள்வர். (ஓ-72)

## சட்டமாணி பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சட்டமாணிக் கற்கைநெறியின் முதலாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்று கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. [illegible] அறிவித்துள்ளார். (3-203)


வியாபாரிமூலை, திருநாவலூர், தம்பசெட்டி, சுப்பர்மடம் கிராம மக்களுக்கான வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரின்
இலவச மருத்துவ சேவை

இடம்:- யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்
காலம்:- நாளை (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை
மு.பகல் 9.30மணி தொடக்கம் பி.பகல் 2.00 மணிவரை

சேவை வழங்குவோர்
பொதுமருத்துவம்:- வைத்தியகலாநிதி எஸ்.சசிகாந் (லண்டன்)
வைத்தியகலாநிதி எஸ்.திருமங்கை
(தேசிய வைத்தியசாலை, கொழும்பு)
பல்மருத்துவம்:- வைத்தியகலாநிதி நிரஞ்சன் (பற்சிகிச்சை நிபுணர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)
குழந்தை மருத்துவம் :- Dr.TRISTAN BATE, PAEDIATRICIAN, U.K.
Dr.JESSICA BATE, PAEDIATRICIAN, U.K.
KERRY PAGE, HEALTH DELEGATE,
- AUSTRALIAN RED - CROSS

★ கண்பரிசோதித்து மூக்குக் கண்ணாடி வழங்குதல்
கண்பரிசோதனை நிபுணர் ஜே.ஏ.எஸ்.பெர்னாண்டோ
(பிரபல எஸ்.எம்.பெர்னாண்டோ நிறுவனத்தினர்)
★ குருதி அமுக்கம், சிறுநீர்ப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

நெருக்கடியினைத் தவிர்க்கும் முகமாக உரியநேரத்தில் சமுகமளித்து பயன்பெறுமாறு தயவாக வேண்டுகின்றோம்.

அனுசரணை வழங்குவோர்:
கலைமணி சனசமூக நிலையம், வியாபாரிமூலை.
நாவலர் சனசமூக நிலையம், திருநாவலூர்.
சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்,தம்பசெட்டி.
வடமராட்சி லயன்ஸ் கழக சார்பில்

வீ.சிவகுமாரன்
தலைவர்.
(39)(21.17.14
அ.துரைசிங்கம்
செயலாளர்.



COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல 15, சிராம்பியடி வீதி (off Stanly Rd.)
Tele:- 0777 222422, 0773151647

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Computerized Accounting
AccPac + Quick Books Pro + MYOB
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்

Course Contents
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- fore Casting
- Business Planning

80% Off

இக்கற்கைநெறியின் முடிவில் வேலைகொள்வதற்கு
Audit Firm Experience தேவையில்லை!
Working Experience தேவையில்லை!

ஆரம்பம்
27/08/2005 9.30 AM
28/08/2005

Tally Accounting Package
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது



Jayoda ஜயோதா ජයෝදා
உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7169510 முதல் 7181768 வரை சீட்டிழுப்பு இல. 162 திகதி 25-8-2005

வெற்றி எண்கள் 3 8 6 9 7 2 சுப்பர் எண் 22

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,29,97,725/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,29,97,725/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 107 | 5,000/- | 535,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,073 | 500/- | 5,36,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,699 | 50/- | 5,34,950/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,06,044 | 10/- | 10,60,440/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 1,000/- | 1,11,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,068 | 100/- | 1,06,800/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,601 | 20/- | 2,12,020/- |
| | | மொத்தம் | 46,86,710/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 52,89,310/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,32,95,275/-
தொடர் இல. 6240297 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 29 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
[illegible] வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 7173581-4-05 |
| புத்தளம் | 7177777-0-82 |
| கம்பஹா | 7179404-1-54 |
| மாத்தறை | 7170111-8-11 |
| மட்டக்களப்பு | 7174845-7-66 |
| கொழும்பு | 7173948-7-23 |
| கண்டி | 7173703-4-13 |
| காலி | 7176329-9-31 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கங்கள் மெத்தனம் காட்டினால் கமக்கார அமைப்பூடாக நெல் கொள்வனவு

## கிளிநொச்சி அரசஅதிபர் தெரிவிப்பு



பரந்தன்,ஓக.27

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் கொள்வனவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மெத்தனம் காட்டினால் கமக்கார அமைப்புக்கள் ஊடாக அப்பணி மேற்கொள்ளப்படும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம்.

சமீபத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பெரும் போகத்தில் பயிரிடப்பட்ட நெல்லைக கொள்வனவு செய்ய 4 கோடி ரூபா பணத்தினை அரச திறைசேரி வழங்கி இருந்தது. இதற்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் நெற்கொள்வனவை மேற்கொண்டன.

பெரும் போகத்தில் 4 கோடி ரூபாவுக்கு 3456.716 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டது. தற்போது திறைசேரி ஒப்புக்கொண்டதற்கிணங்க நெல்லை தென் பகுதிக்கு கொண்டு செல்வதற்கான அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைவாக இருப்பில் இருக்கும் நெல் எடுத்துக் செல்லப்பட்டவுடன் விரைவாக நெற்கொள்வனவை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டும்.

இதை விட சிறுபோக நெற்கொள்வனவுக்கென ஒரு கோடியே 50 லட்சம் ரூபா திறைசேரியால் வழங்கப்பட்டுள்ளது. எனவே, எதுவித தாமதமும் இன்றி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெற்கொள்வனவை மேற்கொள்ள வேண்டும். இதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மெத்தனம் காட்டினால் கமக்கார அமைப்புக்கள் ஊடாக நெற்கொள்வனவு மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-352)

## தலைமைத்துவ பயிற்சிநெறி

சமூக மட்டக் குழக்களை மேம்படுத்தும் நோக்கிலான தலைமைத்துவப் பயிற்சிநெறி காஞ்சிபுரத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனும் நிகோட் நிறுவனத்தின் அனுசரணையுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்களின் கீழ் இப்பயிற்சிநெறி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காஞ்சிபுரம் கிராம முன்பள்ளியில் இடம்பெற்ற இப்பயிற்சி நெறி, சமூகு பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் சு.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியின் வளவாளர்களாக கிளிநொச்சி அரச செயலகத்தைச் சேர்ந்த சமூகு அபிவிருத்தி உத்தியோகத்தர் கேதீஸ்வரன், திட்டமிடல் உத்தியோகத்தர் அமல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினார்கள். இதில் இக்கிராம மட்ட அமைப்புக்களைச் சார்ந்த 25 உறுப்பினர்கள் பங்குபற்றினர். (ஓ)

## பூநகரியில் இன்று கிருஷ்ண ஜெயந்தி

முழங்காவில்,ஓக.27

பூநகரி பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா பஜனை நிலையத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவும் கிருஷ்ண ஜெயந்திப் பெருவிழாவும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு வழக்கம்போல முழங்காவிலில் உள்ள பொன்னுசாமி என்பவரது இல்லத்தில் நடைபெறும் என்று பஜனை நிலைய நிர்வாகி ந.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

(எ-323-203)

# காணிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை

## செயலணி ஆணையாளர் தகவல்

பரந்தன்,ஓக.27

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்துவரும் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக மாவட்ட துரித காணி செயலணி ஆணையாளர் எஸ்.சிவசொரூபநாதபிள்ளை தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

துரிதகாணிச் செயலணி நிறுவப்பட்ட பின்னர் இதுவரைக்கும் 55 கிராம அலுவலர் பிரிவுகளில் நிலவிவந்த காணிப் பிரச்சினைகள் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டன. இந்த விசாரணைகளின் முடிவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு காணி வழங்க ஏற்ற நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளை, பூநகரி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் காணி வழங்குவதற்கான செயற்பாடுகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள், பிரதேச காணி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் இதுவிடயத்தில் ஆர்வத்துடன் செயற்பட்டுவருகின்றனர் - என்றார். (எ-352)





*புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாணிக்கபுரம் விசுவமடுப் பகுதியில் வசிக்கும் எஸ்.ஆறுமுகம் என்ற விவசாயியின் தோட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட அன்னாசி இம்முறை நல்ல விளைச்சலைத் தந்துள்ளது. அன்னாசித் தோட்டத்தையும், அன்னாசி ஒன்றுடன் தோட்ட உரிமையாளர் தம்பதியினர் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.*

*(படங்கள்:பரந்தன் செய்தியாளர்)*

## சுகாதார விழிப்புணர்வு செயற்றிட்டம்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு மருதங்கேணி இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் மக்களுக்கான சுகாதார விழிப்புணர்வு செயற்பாடு நிகழ்வொன்று கடந்த 15ஆம் திகதி நடத்தப்பட்டது.

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் இணைந்து இச்செயற்பாட்டை மேற்கொண்டனர். இந்நிகழ்வில் சுகாதார விழிப்புணர்வு தொடர்பான வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டு நிகழ்வில் மருதங்கேணி கிராமஅலுவலர், இடைத்தங்கல் முகாம் தலைவர், சுகாதாரப் பரிசோதகர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன ஊழியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-203)

# பண்பாட்டு விழுமியங்களுக்கு பாடசாலைகள் உறைவிடம்

## *மாகாணக் கல்வி அமைச்சின் செயலர்*

புதுக்குடியிருப்பு,ஓக.12

ஒரு கிராமத்தின் பண்பாட்டு விழுமியங்களுக்கு ஊற்றாக விளங்குவது அந்தக் கிராமத்தில் உள்ள பாடசாலைகள்தான். ஒரு நல்ல பாடசாலை உள்ள கிராமத்தின் கல்வி, கலை, பண்பாடுகள் அனைத்தும் சிறப்பாகக் காணப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பாடசாலை போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு ஒரு நிரந்தரக் கட்டடம் எதுவும் அற்ற நிலையில் தற்காலிக கொட்டகைகளில் இயங்கிவந்த போதும் உறுதி தளராது இன்று இந்த நிலைக்கு வளர்ந்துள்ளது. அத்துடன், கல்விக் கட்டமைப்பையும் பேணிப் பாதுகாத்துவந்துள்ளது.

இதேவேளை, இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்களையும் மனதார நான் பாராட்டுகின்றேன். இவர்கள் இந்தப் பாடசாலை அபிவிருத்திக்கு செய்த உதவி மிகவும் வரவேற்கத்தக்கது.

புலம் பெயர்ந்து வாழ்கின்ற நிலையிலும் தமது சொந்தக் கிராமத்தை மறக்காது தன் நலன்கருதாத இவர்களது சேவை மென்மேலும் வரவேற்கத்தக்கது -என்றார்.

(எ-353-203)

# எழுச்சிப் பிரகடனம் தொடர்பாக வட்டக்கச்சியில் விசேட சந்திப்புகள்

வட்டக்கச்சி,ஓக.27

எதிர்வரும் முதலாம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசியத்தின் எழுச்சிப்பிரகடனம் தொடர்பான கிராம தரிசிப்பிலும் விசேட சந்திப்புகளிலும் வட்டக்கச்சிப் பிரதேச ஏற்பாட்டுக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி முதல் கிராம தரிசிப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இது முதலாம் திகதி வரை தொடரும் என்று செயலணிக் குழுவினர் தெரிவித்தனர்.

விசேட சந்திப்புகள்கடந்த 18ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றன. வர்த்தகர் சங்கத்தினருடனும் செயலணிக்குழு அங்கத்தவர்களுடனும் இந்து ஆலய ஒன்றியங்களின் பிரதிநிதிகளுடனும் உழவு இயந்திர உரிமையாளர்களுடனும் சந்திப்புகள் நடைபெற்றுள்ளன.

இச்சந்திப்புகளில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன செயலணித் தலைவர் தி.பிரபாகரன், வட்டக்கச்சிப் பிரதேச தமிழ்த்தேசிய எழுச்சிப்பிரகடன செயலணித் தலைவர் சி.தண்டாயுதபாணி மற்றும் செயலணிக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு வருகின்றனர்.

(ஓ-405)

# பால்பொருள் உற்பத்திச் சாலையின் நிர்மாணப்பணிகள் விரைவில் பூர்த்தியாகும்

பரந்தன்,ஓக.27


கிளிநொச்சி மாவட்டத்திற்கான பால் பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை கிளிநொச்சி நகரப்பகுதியில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பால்பொருள் உற்பத்தி தொழிற்சாலையின் நிர்மாண வேலைகள் தற்போது முடிவுறும் நிலையில் உள்ளன என்றும் -

கால்நடை வளர்ப்பாளர்கள் நன்மையடையக் கூடிய வகையில் இந்தத் தொழிற்சாலை திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்படுவதாகவும்- கூறப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துவருகின்றது.

சுமார் 6கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் இந்த பால் உற்பத்தி தொழிற்சாலைக்கான நிதியினை புலம்பெயர்ந்து வெளிநாடு ஒன்றில் வசித்துவரும் ஒருவர் வழங்கியுள்ளார் எனக்கூறப்பட்டது.(எ-352)




# ஒட்டுசுட்டானில் கடும் வரட்சி; பயிர்கள் அழிவடையும் நிலையில்

ஒட்டுசுட்டான்,ஓக.27

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடும் வரட்சி நிலவுவதால் வான்பயிர்கள் உட்பட ஏனைய பயிர்களும் அழிவடையும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள கிணறுகள், குளங்கள் போன்றவற்றில் நீர் மட்டம் குறைவடைந்து செல்கிறது.

[illegible] மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்டதூரம் செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், ஆடு, மாடுகளும் குடிப்பதற்கு தண்ணீர் இன்றி அலைந்து திரிவதனைக் காணமுடிகின்றது.

வரட்சிகாரணமாக பயிர்கள் அழிவடைவது ஒருபுறமிருக்க யானைகளும் வயல்கள், தோட்டங்களுக்குள் நடமாடி பயிர்களை அழித்து வருகின்றன என்றும்- விவசாயிசு கவலை தெரிவித்துள்ளனர்.

(எ-341-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Kodak படச்சுருள் படப் பிரதியாக்கும் நவீனரக இயந்திரம் (4R மட்டும்) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.No. 0776523229, 0777252109. (39295)

P.O.Box.2 Kokuvil, SriLanka. (39251)(14-15-42)

- போதகர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் பரராஜசிங்கம் சோமசுந்தரம்

(சமரபாகு, தேவன் குறிச்சி, உடுப்பிட்டி)

**மறைவு: 29-07-2005**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டதும் ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தோருக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டோருக்கும் தபால் மூலம், தொலைபேசி மூலம் இரங்கல் செய்தி அனுப்பி வைத்தோருக்கும் இன்னும் வெவ்வேறு பல வழிகளிலும் உதவி ஆறுதல் கூறியோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சமரபாகு, தேவன்குறிச்சி, உடுப்பிட்டி.
தொலைபேசி இல. 0777294249 (39268)(32-)

**மனைவி, மக்கள், மருமகள்.**

## மரண அறிவித்தல்

### தம்பிராசா மதனராசா



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா மதனராசா 23.08.2005 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் பூமலரின் அன்புக் கணவரும் சுதாகரின் (கனடா) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பிராசா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற திரு. திருமதி கதிரவேலு தம்பதியரின் அன்பு மருமகனும் பாலசுப்பிரமணியம் (தவம்) அவர்களின் அன்பு மைத்துனரும் திலகம் (கனடா), இந்திராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யோகானந் (கனடா), ஜெகானந் (கொழும்பு), கோகிலா, கம்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரது வீரபத்திர கோயிலடி தெற்கு, உடுப்பிட்டியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கரம்பபாளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும், ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திர கோயிலடி தெற்கு,*
*உடுப்பிட்டி.* (39286)(42-14-15)

*தகவல்*
*பாலசுப்பிரமணியம்*
*(தவம்-மைத்துனர்).*

## முன்பள்ளிக் கண்காட்சி

கொடிகாமம்,ஓக.27

வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய கொடிகாமம் பிரதேச முன்பள்ளிகளின் கண்காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

(ஓ-74)


### PRESIDENT CFL



பல்புகள் இப்போது
இலகு தவணையில் கிடைக்கும்

- SLS இன் FIVE STAR தரச்சான்று
- DNV Norway யின் ISO 9000 சான்று
- 8000 Hours Life time
- President Lighting Singapore நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்டது.
- இலங்கை உற்பத்தி, ஒரு வருட உத்தரவாதம்.

உங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இறுதிமாத மின்சாரப் பட்டியலுடன் அடையாள அட்டையும் கொண்டு வரவேண்டும்.

தொடர்பு: **Light Line,** (38346)(32.15.16)
580, K.K.S. Road, Jaffna. T.P.: 0777 224556.



### சுன்னாகம் டிப்போவில் அடங்கும் மின்சார பாவனையாளர்களுக்கு ஓர் அறிவித்தல்!!!

இலங்கை மின்சார சபையினூடாக SLS இன் Five star தராதரம் பெற்ற PRESIDENT CFL மின்குமிழ்கள் வட்டியின்றிய இலகு தவணை முறையில் வாராந்தம் செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகளில் சுன்னாகம் பிரதேச காரியாலயத்தில் விண்ணப்பத்தைப் பெற்றுக் கீழ் கண்ட நிறுவனத்தில் மின்குமிழைப் பெற்றுக்கொள்ளலாம்.

**துவாரகாஸ் எலெக்ரிகல்ஸ்,**
22, K.K.S வீதி, சுன்னாகம்.

அனுசரணை : PRESIDENT CFL மின்குமிழ்கள்.

(39271)(32.14.1.42)


## சிந்தை நொந்து வருந்துகின்றோம்



இந்துவின் மைந்தன்
நல்லாசிரியன்
முன்னாள்....
ஆசிரிய கழகத் தலைவர்
விடுதிக் காவலர்
பிரதி ஆதிபர்
சைவத்தமிழ் வித்தகர்

க.சிவராமலிங்கம் பிள்ளை ஐயாவின் அமரத்துவமறிந்து சிந்தை நொந்து வருந்தும் நாம், குடும்பத்துயரிலும் பங்கேற்று அமரரது ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி-44794)(42-14-15)

## கண்ணீர்க் காணிக்கைகள்



(25-08-2005) வியாழக்கிழமை காலமான யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர்

**கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை**

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.

**உரிமையாளரும் ஊழியர்களும்,**
**யாழ்ப்பாண வணிக நிலையம்,**
**யாழ்ப்பாண இரும்பகம்.**

(39316)(46-42-14-15)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணுலகில்
1958
-
01
-
17



விண்ணுலகில்
2005
-
07
-
28

### அமரர் சுப்பிரமணியம் வல்லிபுரம் (ஓவசியர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (27.08.2005) சனிக்கிழமை பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்குத் தாங்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

துணாவில் மேற்கு,
கண்டிவீதி, சாவகச்சேரி.
190ஆம் கட்டை.

- **குடும்பத்தினர்.**

(39020)(42-14-15)

வலிகாமம் தென்மேற்கு
பிரதேச செயலக
## கலாசார விழா
**2005**

தலைவர்
**திருமதி ரூபினி வரதலிங்கம்**
(பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
இடம்:
மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபம்
காலம்:
27.08.2005(சனிக்கிழமை)
பி.ப.2.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை

**முதல் நாள் நிகழ்வுகள்**
27.08.2005 சனிக்கிழமை

### நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அரங்கு

தலைவர் :
**திருமதி எ.அன்ரன் யோகநாயகம்**
*(உதவிப் பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)*
*பிரதம விருந்தினர்:*
**மேதகு ஆ.சிவசுவாமி**
*(மேலதிக அரச அதிபர்,யாழ்ப்பாணம்)*
*சிறப்பு விருந்தினர்கள்*
**திருமதி ப.திலகநாயகம் போல்**
*(முன்னாள் மேலதிக அரச அதிபர்)*
**திரு ஆ.சுப்பிரமணிய சர்மா**
*(உதவிச் செயலாளர், பிரதம செயலாளர் அலுவலகம். வடக்கு-கிழக்கு மாகாண சபை, திருகோணமலை)*
**திரு.மு.திருநாவுக்கரசு**
*(முன்னாள் மாவட்ட நீதிபதி)*
**திரு.ந.ஜெயரட்ணம்**
*(முகாமையாளர், இலங்கை வங்கி - மானிப்பாய்)*
**திரு.மே.யோ.சாந்தசீலன்**
*(செயலாளர், வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்)*
**திருமதி கி.சிவராஜா**
*(அதிபர், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)*
**திரு.மா.செல்வராசா**
*(தலைவர், ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்)*

**நிகழ்வுகள்**

மங்கள விளக்கேற்றல்
மங்கள இசை:
வடலியூர் ஜெயராமன் குழுவினர்
வரவேற்பு நடனம்:
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய மாணவிகள்
தமிழ்த்தாய் வாழ்த்து:
யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவிகள்

வரவேற்புரை: திரு. வே. அருந்தவராசா
(சமூக சேவை உத்தியோகத்தர்)
ஆசிரியுரை: சிவஸ்ரீ.ப.ஜெயக்குமாரக்குருக்கள்
(மருதடி விநாயகர் ஆலய பிரதமகுரு, மானிப்பாய்)
அருட்திரு A.P.அன்ரவிப்பிள்ளை
(பங்குத்தந்தை, மானிப்பாய்)
**தலைமையுரை**
**சிறப்பு விருந்தினர் உரை**
**பிரதம விருந்தினர் உரை**
**பாட்டு**
**சோமசுந்தரப்புலவர் நினைவுப் பாடல்**
(யா/நவாலி மகா வித்தியாலய மாணவர்கள்)
**நாட்டார் பாடல்:**
(யா/மானிப்பாய் மெமோறியல் நவோதயா கல்லூரி மாணவர்கள்)
**நடனம்: செல்வி சு.துஸ்யந்தி**(மானிப்பாய்)
**சிந்து நடைக்கூத்து:**
யா/மானிப்பாய் மெமோறியல், நவோதயா பாடசாலை மாணவர்கள்
இசை **நடனம்: 'பாஞ்சாலி சபதம்'**
(யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகள்)
**மீண்டும் கட்டி எழுப்புவோம்:** } (இசை நடனம்)
**சப்தம்**
(யா/பண்டத் தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள்)
**நாடகம்: 'மறுமலர்ச்சி'**
(வடலியடைப்பு இந்து மாமன்றம்)
**நடனம் : செல்வி வேணு**
(யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவி)
**பக்திப்பாடல் : திருமதி யே.பிரெசிலா,**
(கிராம அலுவலர், சாவல்கட்டு)
**நடனம்: } 'ஆழிப்பேரலை அனர்த்த**
**பாடல்: } எழுச்சி'**
(யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய மாணவர்கள்)
இசைக் **கதம்பம் : கலாபூசணம் க.ப.சின்னராஜாவின் மாணவர்கள்**
**நடனம் : திரு.யோ.ஞானச்சந்திரன்**
(பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)
**நாட்டுக் கூத்து : 'சகோதர பாசம்'**
(புனித தோமையார் மன்றம், மாதகல்)
**நன்றியுரை : திரு.எஸ்.பி.யோகராசா,**
(கிராம அலுவலர் மானிப்பாய் கிழக்கு)

*அனைவரையும்*
*அன்புடன் அழைக்கின்றோம்.*

**கலாசாரப் பேரவையும்**
பிரதேச செயலகம், **வலி. தென்மேற்கு பிரதேச**
வலி. தென்மேற்கு, **செயலக சமூகமும்.**
சண்டிலிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையில்...

தென்மராட்சி,ஓக.27

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சிறாப்பராகக் கடமையாற்றிய கே.எஸ்.ஐயாத்துரை கடந்த முதலாம் திகதியுடன் தனது 37 வருட கால சேவையிலிருந்து இளைப்பாறினார். இவர் மட்டக்களப்பு, மன்னார் மாவட்ட செயலகங்களிலும் கோப்பாய், தென்மராட்சிப் பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றியுள்ளார். (எ-117)

* * *

வலி.தென்மேற்கு,ஓக.27

கடந்த மூன்றரை வருடங்களாக வட மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகமாகக் கடமையாற்றும் மாதகலைச் சேர்ந்த என்.ஜெயரட்ணம் அடுத்தமாதம் 12ஆம் திகதியுடன் பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளார். தமது பதவிக் காலத்தில் தமக்கு ஒத்துழைப்பு வழங்கிய தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்து நன்றிமடலை இவர் அனுப்பியுள்ளார். (ஒ-135)

# நூல் வரிசை



நூல்: ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியக் கட்டுரைகள்

வெளியீடு: ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப்புலவர் கழக வெளியீடு

கடந்த ஆண்டு கொழும்பில் நடைபெற்ற தொல்காப்பிய மாநாட்டில் வெளியிடப்பட்ட நூலாக ''ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியக் கட்டுரைகள்'' என்னும் கட்டுரைத் தொகுப்பு விளங்குகிறது. 'ஈழத்துப் பூதந்தேவனார் கழக' வெளியீடாக இது உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 136 பக்கங்களை உடைய இந்நூலிலே ஈழத்தையும் தமிழ்நாட்டையும் சேர்ந்த அறிஞர்களின் தொல்காப்பியம் பற்றிய 25 கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

பண்டைய இலக்கண நூற்கருத்துகளைத் தற்காலத்தவருக்கு இலகுவாக விளங்க வைக்கக்கூடிய வகையில் பல நூல்கள் இன்று வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்தவகையில் இந்த நூலின் வரவும் தமிழ் மக்களுக்குப் பயன்தருவதாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியத்தைப் பல்வேறு கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து விளங்குவனவாக இந்நூலிலுள்ள கட்டுரைகள் அமைந்துள்ளன.

இந்நூலிலுள்ள கட்டுரைகளினுள்ளே ஆழமானதும் விரிவானதும் முழுமையானதுமான ஆய்வாக விளங்குவது சொக்கன் எழுதிய, 'தொல்காப்பியர் நோக்கில் மரபு' என்னும் கட்டுரையாகும். தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் 'நூன்மரபு', 'மொழிமரபு' சொல்லதிகாரத்தில் 'கிளவியாக்கம்' முதலிய இயல்களிற் கூறப்பட்ட தமிழர் மரபுகள் பற்றிய தகவல்கள் இங்கு தொகுத்துத் தெளிவுபடுத்தப்படுகின்றன.

''தொல்காப்பியரின் ஆழ நோக்கும் அகலப்பார்வையும் உலகியற் பார்வையும் நூல் முழுவதிலும் செறிந்துள்ளபோதும் அது குன்றிலிட்ட தீபம்போல் வெளிப்படும் இடம் கிளவியாக்கமே'' எனக் கூறும் சொக்கன் தொல்காப்பியர் கூறும் பல கருத்துகள் இன்று விஞ்ஞான ரீதியாவும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவை என ஆதாரத்துடன் விளக்குகின்றார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளர் ச.விஜயலெஷ்மியின் 'தொல்காப்பியரின் இடைச்சொற்களும் சொற்பொருண்மையின் செயற்பாடும்' என்னும் கட்டுரையும் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியதொன்றாகும். இடைச்சொற்களின் வகைப்பாடுகளை உதாரணங்களுடன் தெளிவாக விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. எனினும், 'மன்த', 'லுள' என்பவற்றை இடைச்சொற்களாக இனங்காட்டி அவர்தரும் விளக்கம் ஐயத்துக்குரியதாக உள்ளது.

சங்ககால அகத்திணை இலக்கியங்களில் அதிகம் பயன்படுத்தப்பட்ட அணிகளாக உள்ளுறை உவமையும் இறைச்சிப்பொருளும் உள்ளன. வெளிப்படையாகக் கூற முடியாதனவற்றைக் குறிப்பாகவும் நாகரிகமாகவும் கூறுவதற்கு இந்த அணிகள் பயன்பட்டன. எனினும், உள்ளுறையையும் இறைச்சியையும் வேறுபடுத்திக் கொள்வதில் இன்றுவரை தெளிவற்ற நிலையே காணப்படுகின்றது. இந்தத் தெளிவின்மையை நீக்குவதாகத் தஞ்சாவூர்ப் பல்கலைக்கழக முனைவர் மா.பார்வதியின் 'தொல்காப்பியரின் உள்ளுறையும் சங்க இலக்கியப் பாடற் சான்றுகளும்' என்னும் கட்டுரை அமைகின்றது.

''தொல்காப்பியர் புவியியல், வானியல், கணிதம், இயற்பியல், மருத்துவம், உளவியல், உயிரியல் போன்ற பலதுறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். என்பதற்கு அவர் இயற்றிய தொல்காப்பியமே சான்றாகும் எனக் கூறுகின்ற தா.க.அனுராதாவின் 'தொல்காப்பியரும் அறிவியலும்' என்னும் கட்டுரை தொல்காப்பியத்திற்காணப்படும் அறிவியற் சிந்தனைகளை ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக உள்ளது.

முழுமையாக நோக்கும் போது, 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியக் கட்டுரைகள்' என்னும் இந்நூலை வாசிக்கும்போது தொல்காப்பியத்தைப் பல்வேறு கோணங்களிலும் நுணுகி ஆராய்ந்த மனநிறைவு கிடைக்கின்றது.

**ம.பா.மகாலிங்கசிவம். ஆசிரியர்.**



நூல்: *வேடிக்கை*

இருவார இதழ்



துணிச்சல் மிக்க முயற்சி 'வேடிக்கை' 'சாத்தியப்படாத விடயம்' எனப் பலராலும் அறிவுரைகள் கூறப்பட்டாலும் 'முயன்றால் முடியாதது இல்லை' என்று ஒரு குழு புறப்பட்டிருக்கிறது. இப்படித்தான் தங்கள் வருகையை 'வேடிக்கை' இருவார இதழில் பிரதம ஆசிரியர் குழு தெரிவிக்கிறது. இந்த இதழின் முதலாவது நூல் வெளியீட்டு விழா ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இப்போது இரண்டாவது இதழும் வெளிவந்துவிட்டது. ஒரு பல்சுவை சஞ்சிகையாக இவை வெளிவந்திருக்கின்றன.

முதல் இதழிலேயே இலக்கியம், மருத்துவம், தகவல் தொழில் நுட்பம், சிறுகதை, ஆன்மீகம், மொழியியல், தொழில்வளம், செய்தித்திரட்டு, விளையாட்டு, சுற்றுலா, அறிவியல், தகவல், விழிப்புணர்வுக் கட்டுரைகள், சமையல், நகைச்சுவை என்று சகல அம்சங்களிலும் சிரத்தையெடுத்து ஆசிரியர்குழு செயற்பட்டிருக்கிறது. 'வேடிக்கை' என்று இதழின் பெயர் இருந்தாலும் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் 'தீவிரமானவையாகவே' உள்ளன. 'நெத்தியடி' என்று தொடங்கி திருந்தா விட்டால் 'நேரடி' என்று எச்சரிக்கும் சுடுவான் பாராட்டுக்குரியவர். 'இருளின் நாயகர்கள்' என்று ஜேனா எழுதும் மர்மத் தொடர் சிலிர்க்க வைக்கிறது. அதனை ஒரு பக்கத்துடன் மட்டுப்படுத்திய ஆசிரியர் மீது கோபிக்கத் தோன்றுகிறது.

லட்டு எழுதும் 'மந்திரமா? தந்திரமா?' தொடர் மூடநம்பிக்கைகளை குழி தோண்டிப் புதைக்க மக்களுக்கு வழிகாட்டுகிறது. 'குண்டக்க மண்டக்க' கதை சொல்லும் குப்புச்சாமியும் பிரசாத் வரையும் 'முராரி' தொடர் நவீனமும் சிந்தனையைத் தூண்டுகின்றன. வாசகர் கேள்விகளுக்குப் பதில் கொடுக்கும் வம்பன், கேள்விப்பட்டவர்களையே வம்பில் மாட்டிவிடுகிறான்.

இதுவரை வெளிவந்த இரண்டு இதழ்களிலும் பக்க வடிவமைப்பு நேர்த்தியாக இருக்கின்றது. தரமான விடயங்களை எழுத்துப் பிழைகளுடன் தந்தால் அதுவே இதழின் தரத்தைக் குறைத்துவிடலாம். ஆசிரியபீடம் கவனிக்க வேண்டி ய விடயம் இது.

'வேடிக்கை' ஆசிரியர் கூறுவது போல் இந்தப் பயணத்தில் வரும் தடைகள் ஏராளம். அவற்றைத் தாண்டி வெற்றிநடை போடவேண்டும். யாழ். குடாநாட்டில் ஏற்கனவே வெளிவந்து கொண்டிருந்த ஏராளமான பருவ சஞ்சிகைகளில் இப்போது குறிப்பிடத்தக்கதாக எவையும் இல்லை. அந்தத் துன்பியல் யதார்த்தத்தை 'வேடிக்கை' ஆசிரியபீடம் உணர்ந்து மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட்டால் வேடிக்கை மக்களின் வாடிக்கையாகிவிடும் என்பது திண்ணம்.

- [illegible]

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.27

அளவெட்டி நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலயத் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு சங்காபிசேகம் நடைபெற்று முற்பகல் 11மணிக்கு சுவாமி தேருக்கு எழுந்தருளுவார். இரவு 7 மணிக்கு உறியடித் திருவிழாவும் நடைபெறும்.(3-203)

* * *

கிளிநொச்சி,ஓக.27

வட்டக்கச்சி ரங்கநாதப் பெருமாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் பகல் சங்காபிசேகமும் இரவு திருக்கல்யாணமும் நடைபெறும். (3-203-405)

* * *

முழங்காவில்,ஓக.27

முழங்காவில் வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி திருவிழா நடைபெறும். நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.(3-323-203)

* * *

யாழ்ப்பாணம் ,ஓக.27

மண்டைதீவு, திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய சங்காபிசேகம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெறவுள்ளது. சங்காபிசேகப் பூசைகள் நிறைவடைந்ததும் அன்னதானம் வழங்கப்படும். (3-203)

வரணி,ஓக.27

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறும். விசேட நிகழ்ச்சிகளாக நெல்லியடி மகாவித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதனின் சமயச் சொற்பொழிவும் செல்வி சிவரஞ்சனி சிவபாதசுந்தரத்தின் இன்னிசைக் கச்சேரியும், கலைமாமணி சத்தியதாஸின் வில்லிசையும் நடைபெறும். (ஒ-170-323)

* * *

கோப்பாய்,ஓக.27

வடகோப்பாய் ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய உறியடி உற்சவப் பெருவிழா இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான சீனடி - சிலம்படி, தீப்பந்தம் சுழற்றுதல், வாட்போர், குதிரை ஆட்டம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 11மணிக்கு தீர்த்தமும் கொடியிறக்கமும் இடம்பெறும். (ஒ-72)

* * *

தொல்புரம்,ஓக.27

யாழ். போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயப் பரணித் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பரணி நட்சத்திர விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து வைரவப் பெருமான் திருவீதியுலா வருவார். (3-119-203)

# எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்



அமரர் ஜீ.வி.கே.பாலசிங்கம் அச்சுவேலியின் மூத்த பிரஜை ஆவார். இவர் பிரபல சட்டத்தரணியும் மல்லாகம் நீதிமன்றத்தின் பதில் நீதிவானுமாகத் திகழ்ந்தவர். அச்சுவேலி கோவில் பற்றுக்கு மட்டுமல்லாது அயற் கிராமங்களுக்கும் அவர் சேவை கிடைத்துள்ளது. இவர் அச்சுவேலி பிரஜைகள் குழு, பாவனையாளர் சங்கம், அரிமாக் கழகம் ஆகிய பல நிறுவனங்களிலும் சேவை புரிந்துள்ளார். அச்சுவேலி அரிமாக் கழகத்தில் ஆரம்ப அங்கத்தவராக இருந்துள்ளார். லயன்ஸ் சீமான் ஜீ.வி.கே.பாலசிங்கம் என்றால் அவரை உலகமே அறியும். 1984ஆம் ஆண்டு சங்கானை வீதியில் கண்ணிவெடி வெடித்து அவர் வசித்த வீடு சேதமடைந்த செய்தி ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்று காட்டுத் தீ போல உலகெங்கும் பரவியதாகும்.

அச்சுவேலியில் இந்திய அமைதிப்படையினர் சென்.திரேசா மகளிர் கல்லூரியில் முகாமிட்டு இருந்தபோது இவரும் இவரது பாரியாரும் அகதிமுகாமில் இருந்துள்ளனர்.

## நீத்தார் நயப்புரை

ஒருநாள் பிற்பகல் இருவரும் வீடுபார்க்கச் சென்றபோது வெடிச்சத்தம் கேட்டது. நேரமாகியும் இவர்கள் முகாமிற்குத் திரும்பவில்லை. இருவரும் இறந்த செய்தி மறுநாளே தெரியவந்தது. அச்சுவேலியே சோகமயமானது.

இவர், வெளிநாடு செல்லாது இந்த மண்ணில் வாழ்ந்த ஒரு நல்ல எடுத்துக்காட்டான குடும்பத்தவராவார்.

அன்னாரின் சேவை அச்சுவேலி மக்களின் மனதில் நிலைத்திருக்கும்.

**க.கனகராசா.**



அண்மையில் நடைபெற்ற வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப் பெருவிழாவில் மூத்த கலைஞர்கள் 24 பேர் பொன்னாடை போர்த்தி ''கலைவாரிதி'' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட கலைஞர்களையும் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் மற்றும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம். (படம்:வலி. மேற்குச் செய்தியாளர்)



சாவகச்சேரி தென் மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தின்போது தொடர் சமயச் சொற்பொழிவு ஆற்றிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் சி.கா. கமலநாதனுக்கு ஆலயப் பிரதம குரு ஸ்ரீ விஸ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள் 'சிவநெறிச் செல்வர்' என்னும் பட்டத்தினை வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தவேளை எடுக்கப்பட்ட படம்.

(படம்: வரணிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உதயன்' - 'சுடர் ஒளி' பணிமனை மற்றும் செய்தியாளர் மீதான வன்முறைக்குக் கண்டனம்

## ஜே.வி.பியின் இந்தப் பார்வை புதிதல்ல

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

'சுடர் ஒளி', 'உதயன்' பத்திரிகை நிறுவனங்களின் வெள்ளவத்தைக் கிளை அலுவலகத்தின் மீதான கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் செய்தி வெளிவந்த இரண்டு நாள்களுக்குள், அதே பத்திரிகையின் செய்தியாளர் பிரேமச்சந்திரன் யதுர்ஷன் மீது ஜே.பி.பி.யினர் தாக்குதல் நடத்தியிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்தியை அறிந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிர்ச்சியும் கவலையும் கொண்டுள்ளது.

சகல ஊடகவியலாளர்களும் இன, மத வேறுபாடின்றிக் கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படையில் மதிக்கப்பட்டு கௌரவிக்கப்படவேண்டியவர்களே.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜே.வி.பி., தமிழ் ஊடகவியலாளர்கள் மீது கொண்டுள்ள வன்முறைப் பார்வை புதியதொன்றல்ல. ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் ஜே.பி.பி. யினால் தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜனநாயக வழிக்கு வந்த பின்பும் இத்தகைய ஜனநாயக அடிப்படை விரோதச் செயல்களில் ஜே.வி.பியினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதையிட்டு முஸ்லிம் காங்கிரஸ் ஆச்சரியமடைந்துள்ளது.

அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்துவது, பத்திரிகையாளர்களைத் தீவிரவாதிகளாக அல்லது பயங்கரவாதிகளாக இனங்காட்டுவது போன்ற செயல்களின் மூலம் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் செயல்களும் அவர்கள் படுகொலை செய்யப்படுவதும் உடனடியாகவும் முழுமையாகவும் நிறுத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் முழுமையாக வலியுறுத்துகிறது. தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான சகலவிதமான வன்முறைகளையும் கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது. அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்படுவதை நிறுத்தவேண்டும் என்றும் தொடர்புடைய சகல தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறது.

## ஊடகவியலாளர்கள் திரள வேண்டும்

### - கவிஞர் வேலணை வேணியன்

தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் இம்சிக்கப்பட்டும் வருகிறார்கள். இதனைச் சிங்கள ஊடகவியலாளர்களும் கண்டிக்க முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. மொழியால் வேறுபட்டாலும் ஊடகவியலாளர்கள் தொழில்ரீதியாகச் சகோதர சகோதரிகளே. உடகவியலாளர்களால் ஓர் அரசின் தலைவிதியையோ, அரசியல் தலைவர்களின் பதவிகளையோ தீர்மானிக்கமுடியும் என்பது ஒரு சிறிய குழந்தைக்கும் தெரியும். அந்தவகையில் அண்மையில் 'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளர் யதுர்ஷன் கடுமையாகத் தாக்கப்பட்டும் மானபங்கப்படுத்தப்பட்டுமுள்ளார்.

செய்திகளை மக்களுக்கு வழங்க முன் வந்த இளம் பத்திரிகையாளரை ஜே.வி.பி. தாக்கியுள்ளது. 'உதயன்', 'சுடர் ஒளி' முற்றுமுழுதாக தமிழ் மக்களின் நலனுக்காக மட்டுமல்லாது நாட்டில் சமாதானம் நிலைபெறவும் உழைத்துவரும் நாளிதழ்கள் என்பதில் ஐயமில்லை.

எந்த அரசாங்கத்துக்கும், அரசியல் தலைமைகளுக்கும் எதிரான பத்திரிகைகள் அல்ல. ஆனால், எங்கு குற்றம் காணப்பட்டாலும் அதனை புட்டுக்காட்டத் தயங்காத தினசரிப் பத்திரிகைகள் இவை.

வெட்ட வெட்டத் தழைத்தோங்கும் தன்மானமுள்ள தமிழ்ப் பத்திரிகைகள்சுடர்ஒளி', 'உதயன்'. ஆனால், சிங்கள மக்களுக்கு எதிரானவை அல்ல.

ஒலி, ஒளி, எழுத்து எனத் தங்களை அர்ப்பணித்து நிற்கும் அனைத்து ஊடகவியலாளர்களும் ஒன்றுபடவேண்டிய சந்தர்ப்பம் இது. இவற்றின் அதிபர்களும் இதில் ஒன்றுபட்டு ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்வர வேண்டும்.

தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை இன்றைய அரசாங்கமும் இனிவரும் அரசாங்கங்களும் உறுதிப்படுத்த முன்வருமா என்பதே இன்றைய தமிழ் மக்களினதும், புத்திஜீவிகளினதும், எழுத்தாளர்களினதும் எதிர்பார்ப்பும் கேள்வியுமாகும்.

## சமாதான நடைமுறைக்கு ஆபத்து

### பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில்

தமிழ் ஊடகத்துறை மற்றும் ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்வதன் மூலம் உண்மைகளை என்றும் அழித்து விடமுடியாது. உண்மைகளை வெளிக்கொணர்வதில் ஊடகத்துறையும், ஊடகவியலாளர்களும் என்றுமே பின்நிற்பதில்லை.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் சொந்தக் கருத்துக்களைக் கொண்டிருக்கவும், தமது திடமான கருத்துக்களைத் தாராளமாக வெளியிடவும் பூரண சுதந்திரத்தைக் கொண்டுள்ளனர். இப்படியான தாக்குதல்கள் ஒட்டுமொத்தமான தமிழ் ஊடகத்துறையை நசுக்கி விடுகின்ற நோக்குடனேயே செய்யப்படுகின்றன.

இப்படியான செயல்கள் கண்டிக்கத்தக்கவை. அத்தோடு எதிர்காலத்தில் ஊடகத்துறையும், ஊடகவியலாளர்களும் சுதந்திரமாக இயங்க சம்பந்தப்பட்டோர் ஆவன செய்ய வேண்டும். - என்றும் அவர் கூறினார்.

## ஜனநாயகத்தைப் பாதுகாப்போம்

### முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு

பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது ஜனநாயகத்தை அச்சுறுத்தும் செயலாகும். அதிலும் ஜனநாயகரீதியில் மக்கள் உரிமைகளுக்காகப் போராடுகின்றோம் என்று சொல்பவர்கள் இவ்விதமாக ஜனநாயகத்திற்கு விரோதமான செயலில் ஈடுபடுவது ஜனநாயகத்தைமென்மேலும் அச்சுறுத்தும் நடவடிக்கையாகும். இத்தகைய ஜனநாயத்திற்கு முரணான, தரம் குறைவான செயலில் எவர் ஈடுபட்டாலும் அதனைக் கண்டிக்கவேண்டியது ஜனநாயத்தை வேண்டிநிற்கும் அனைவரதும் கடமையாகும்.

காலத்துக்குக் காலம் பத்திரிகையாளர்கள் துன்புறுத்தப்படுவதும், படுகொலை செய்யப்படுவதுமான நடவடிக்கைகள் இந்நாட்டில் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன. ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நாம் வெறுமனே இவைகளைப் பார்த்துக்கொண்டு எப்போதும் கைகட்டி மௌனிகளாக நிற்கின்றோம்.

இவைகளை நிரந்தரமாக தடுத்து நிறுத்தி, ஜனநாயக தீர்வுகளை நோக்கி நாம் செல்லவேண்டும். அன்றேல் ஜனநாயத்தை பாதுகாக்கும் புறக்காரணிகளான பத்திரிகைத் துறை போன்ற இன்னோரன்னவும் அச்சுறுத்தலுக்குள்ளாகி தேசத்தின் ஜனநாயக முதுகெலும்பான நீதித் துறையையும் வலுவிழந்து போகும் நிலையே உருவாகும்.

இனிவரும் காலங்களிலாவது தேச ஜனநாயத்தைப் பாதுகாப்பதில் அனைத்து பேதங்களை மறந்து நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம். - என்றுள்ளது.

## கருத்துச் சுதந்திரத்தை தடுக்கக் கூடாது

### தேசிய முஸ்லிம் காங்கிரஸ்

அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருக்கும் இச்சமயத்தில் ஊடகங்களால் உண்மையான கருத்துக்களை வெளியிட முடியாமல் போய்விடுமோ, மக்களுக்கு உண்மையான தகவல்கள் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

இந்த ஜனநாயக நாட்டில் கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் உள்ளன. அதை யாரும் தடுக்கமுடியாது. அதேபோல், உண்மையான கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் ஊடகங்களுக்கு உண்டு.

மக்களுக்குச் சரியான தகவலைத் தெரிவிக்கும் ஊடகங்களை அடக்கமுற்படும் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயல்களை ஏற்றுக்கொள்ளமுடியாது. 'சுடர் ஒளி' மீது தொடராக மேற்கொள் ளப்படும் தாக்குதலை தேசிய முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கின்றது.

## இதன்மூலம் எதையும் சாதிக்க முடியாது!

### அமைச்சர் அமீர் அலி

செய்தி சேகரிக்கச் சென்றிருந்த 'சுடர்ஒளி' பத்திரிகையாளர் ஒரு சமூக விரோதியைப்போல் தாக்கப்பட்டார் என்பதை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

பத்திரிகையாளர் ஒருவர் இவ்வாறு தாக்கப்பட்டார்என்பது நமது வெகுஜனத் தொடர்புத்துறைக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாக மாத்திரமன்றி ஜனநாயகத்திற்கு விடுக்கப்பட்ட சவாலாகவுமே கணிக்க வேண்டியுள்ளது. தம் பாட்டுக்குத் தமது கடமையைச் செய்யச் சென்றிருந்த பயிற்சிப் பத்திரிகையாளருக்கு நேர்ந்த இந்தக் கதி வேறு யாருக்கும் இதன் பிறகு நடக்கக்கூடாது என்றே நான் விரும்புகிறேன்.

ஒரு குற்றவாளியை மடக்கிப் பிடிப்பதுபோல் அவர் பிடிக்கப்பட்டுத் தாக்கப்பட்ட படத்தைப் பத்திரிகையில் கண்ணுற்று நான் துணுக்குற்றேன். இவ்வாறான காரியங்களில் ஈடுபடுபவர்கள் இதன் மூலம் எதனையுமே சாதித்துவிட முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசு - புலிகள் பேச்சில் உயர் இராணுவ அதிகாரிகளும்

கொழும்பு,ஓக.27

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து விடுதலைப் புலிகளுடன் நடைபெறவுள்ள பேச்சுகளில் இராணுவ உயர்மட்ட அதிகாரிகளும் கலந்துகொள்வார்களென்று அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்புச் சூழ்நிலையில் பேச்சுக்கான சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் வெளிநாட்டுக்குச் செல்வது என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் ஜயந்த தனபால இணையத்தளமொன்றிக்கு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் கொலைகள், ஒப்பந்த மீறல்களைத் தடுப்பதற்காகவும் இராணுவத்தினரையும் பேச்சுகளில் உள்ளடக்க வேண்டியிருப்பதாக ஜயந்த தனபால மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(க)







**யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினர் உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பரீட்சை வழிகாட்டல் புத்தகங்களை வழங்கிய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.**

**வித்தியாலய அதிபர் ஞானப்பிரகாசம் புத்தகங்களை வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். யாழ். றோட்டறக்ட் கழகத் தலைவர் என்.சரவணபவனும் படத்தில் உள்ளார்.**

**இதற்கான நிதி உதவியை சுவிஸ்நாட்டு கத்தோலிக்க மதத் தந்தை பீற்றர் மனோகரன் வழங்கியுள்ளார். (203)**

## மூன்றாம் தரப்பாக முஸ்லிம்கள்; அரசின் முடிவு இன்னும் இல்லை

புலிகளுடன் அரசு மேற்கொள்ள இருக்கும் சமாதானப் பேச்சுகளில் மூன்றாவது தரப்பாக முஸ்லிம் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்வது பற்றி அரசு எவ்வித முடிவும் எடுக்கவில்லை. இதுபற்றி அரசின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து உரியகாலத்தில் அறிவிக்கப்படும். அதுவரை எதுவும் கூறமுடியாது.

- இப்படிக் கூறினார் சபை முதல்வரும், அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா.

புலிகளுடன் அரசு ஆரம்பிக்க இருக்கும் பேச்சுகளில் முஸ்லிம்களையும் தனித்தரப்பாக இடம் பெறச் செய்வீர்களா? என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கேட்டார். அதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பேச்சுகள் இலங்கையிலா? ஒஸ்லோவிலா? என்பது தொடர்பாக இரு பகுதியினரும் இறுதி முடிவு ஒன்றுக்கு வருவதற்கு முன்னர் இது பற்றி எதுவும் கூறமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

## கல்விக் கல்லூரிப் பயிற்சிக் காலத்துக்கு புள்ளிகள் வழங்குமாறு கோரிக்கை

மறுசீரமைக்கப்பட்ட ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் கல்வியியற் கல்லூரிப் பயிற்சிக்காலத்திற்கும் புள்ளிகள் கணிப்பிடப்பட வேண்டுமென கல்விக் கல்லூரி ஆசிரியர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லிடம் ஆசிரியர் ஒன்றியம் இக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இதுகுறித்து கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆசிரியர் சேவைக்கென்று 3 வருட காலம் கல்வியியல் கல்லூரியில் ஆசிரியர்கள் பயில்கின்றனர். ஆசிரியர் பயிற்சிக் காலத்திற்காக ஒரு வருடத்திற்கு அரைப் புள்ளி வீதம் வழங்கப்படுகிறது. ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறுவோரும் கல்விக் கல்லூரியில் பயிற்சி பெறுவோரும் ஆசிரியர்களே.

இரு தரப்பினரும் பயிற்சியை முடித்துவெளியேறும்போது இலங்கை ஆசிரியர் சேவையில் வகுப்பு 3 தரம் - I இல் உள்ளீர்க்கப்படுகிறார்கள்.

இந்நிலையில் கல்வியியற் கல்லூரிப் பயிற்சிக் காலத்திற்குப் புள்ளி வழங்கப்படுவதில்லை. எனவே, அதற்கான புள்ளியை வழங்குங்கள் என்று குறிப்பிட்டுள்ளது.

(ஒ-84)

### புகையிலை உற்பத்தியாளர் சங்கக் கூட்டம்

மாதகல் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் அண்மையில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் பெயரை மாதகல் விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் என்று பெயர் மாற்றம் செய்வது என்றும் சங்கத்திற்குச் சொந்தமான ஆறு பரப்புக் காணியில் விவசாய செய்கையை மேற்கொள்வது என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஒ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் உள்ளூராட்சித் தேர்தலின் 2ஆம் கட்ட வாக்கெடுப்பு 50 மாவட்டங்களில்

## வன்முறைகளில் இதுவரை 22 பேர் பலி

இஸ்லாமாபாத், ஓக. 27

பாகிஸ்தான் உள்ளூராட்சித் தேர்தல் இரண்டாம் கட்டமாக 50இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நடைபெற்றன. இந்த வாக்கெடுப்புக்கள் தொடர்பாக நடைபெற்ற வன்முறைகளில் இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளனர்; 150 பேர்வரை காயப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடு முழுவதும் உள்ள 110 மாவட்டங்களில் 50இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றன.

கடந்த வாரம் நடத்தப்பட்ட முதற்கட்ட வாக்கெடுப்பில் தற்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கூடுதலான வாக்குகளைப் பெற்று முன்னிலையில் இருந்தார்.

முஷாரப் 1999ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் நடத்தப்படும் இரண்டாவது உள்ளூராட்சித் தேர்தல் இதுவாகும்.

இந்தத் தேர்தலில் 55 ஆயிரம் பெண்கள் உட்பட 2 லட்சத்து 18 ஆயிரம் வேட்பாளர் போட்டியிடுகின்றனர் என தேர்தல் ஆணையகம் தெரிவித்தது.

கடந்த வாரம் நடைபெற்ற முதற்கட்ட வாக்களிப்பில் ராவல்பிண்டி நகரில் 50வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் வாக்களித்திருந்தனர். லாஹூர், பஞ்சாப் ஆகிய மாவட்டங்களில் ராவல்பிண்டியுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவே வாக்களிப்பு நடைபெற்றிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடகிழக்கு எல்லைப்புற மாகாணம் மற்றும் பலுசிஸ்தான் மாகாணம் ஆகியவற்றில் முதற்கட்ட வாக்கெடுப்பின் அளவு குறைந்தளவே காணப்பட்டது. ஆனால், சின்த் மாகாணத்தோடு ஒப்பிடும்போது வாக்களிப்பு அதிகமாக காணப்பட்டது என்று செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

வாக்கெடுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் பஞ்சாப் மாநிலத்தில் இடம்பெற்ற வன்முறைகளில் 14பேர் கொல்லப்பட்டனர் என்றும், பலுசிஸ்தான் மாகாணத்தில் 4பேர் கொல்லப்பட்டனர் என்றும், சின்த் மற்றும் வடகிழக்கு எல்லை மாகாணத்தில் 4 பேர் கொல்லப்பட்டனர் என்றும் பாகிஸ்தானுக்கான பி.பி.ஸி. செய்தியாளர் கூறினார்.

இந்த நால்வரும் வாக்களித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் சின்த் மாகாணத்தின் லார்க்கான் நகர்பகுதியில் வைத்துக்கொல்லப்பட்டனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால், இந்தக் கொலைகள் பழங்குடியினருடன் இருந்த போட்டிப் பகை காரணமாக இடம்பெற்றன. தேர்தலுக்கும் இந்தக் கொலைகளுக்கும் தொடர்பில்லை என பாகிஸ்தான் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

வாக்களிப்பு நடைபெற்ற வாக்குச்சாவடிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும், பொலீஸாரும் பாதுகாப்புப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## பலஸ்தீனர்களின் 400 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்ற இஸ்ரேல் நடவடிக்கை

ஜெருசலேம், ஓக. 27

மேற்குக்கரை நகரில் மிகப்பெரிய யூதக் குடியிருப்பைச் சுற்றிலும் பாதுகாப்பு வேலி அமைக்க பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான 400 ஏக்கர் நிலத்தை பறிமுதல் செய்ய இஸ்ரேல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மனித வெடிகுண்டுகள் புகுவதைத் தடுக்க ஏற்கனவே 680 கிலோ மீற்றர் தூரத்துக்கு மின்சார வேலி, கொன்கிரீட் சுவர், பள்ளங்கள் ஆகியவை அங்கு உள்ளன. அதனுடன் ஒரு பகுதியாக இந்த பாதுகாப்பு வேலி எழுப்பப்படுகிறது.

ஆனால், இந்த வேலி மேற்குக்கரையிலுள்ள சர்ச்சைக்குரிய நிலத்தைக் கைப்பற்றும் முயற்சி என பலஸ்தீனர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அமெரிக்காவும் இந்த வேலிக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது - என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# 7 மாடிக் குடியிருப்பில் திடீர் தீவிபத்து பாரிஸில் 17பேர் பலி; 30பேர் காயம்

பாரீஸ், ஓக. 27

பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் தென் பகுதியில் 7மாடிக் குடியிருப்பு ஒன்றில் திடீரென தீப்பற்றியதில் சுமார் 17பேர் உயிரிழந்தனர். 30இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என பிரான்ஸ் தீயணைப்புப் படை தெரிவித்தது.

நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்ட இந்த மாடிக் கட்டடத்தின் படிகள் உடைந்து பழமையான கட்டடம் என ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஆபிரிக்காவிலிருந்து பிரான்ஸில் குடியேறிய குடும்பங்கள் வசித்துவந்த மேற்படி கட்டடத்தில் இருந்து 130 பேரைக் காப்பாற்றுவதற்கு சுமார் 200 இற்கும் மேற்பட்ட தீயணைப்புப் படையினர் கடுமையாக போராடினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 2.10 மணியளவில் ஏற்பட்ட இந்த தீவிபத்தில் 6 சிறுவர்கள் உட்பட 17பேர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடுகளான செங்கல், மாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த குடும்பங்களே இந்த மாடிக்குடியிருப்பில் வசித்து வந்தனர் என்றும், உயிரிழந்த சிறுவர்களில் ஒரு கைக்குழந்தையும் காணப்பட்டது என்றும் தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் பாரிஸில் பழமையான ஹோட்டல் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது. இதில் 24பேர் உயிரிழந்தனர், 50பேர் காயமடைந்தனர். அதன்பின்னர் ஏற்பட்ட மிக மோசமான விபத்து இதுவென அந்தநாட்டு உள்துறை அமைச்சர் நிகோலஸ் சர்கோசி கூறினார்.

அந்தக் குடியிருப்பின் இரவு காவல் செய்பவரின் தோழி உரோமத்திலான மேலாடையை மெழுகுவர்த்திகள் மீது கழட்டி எறிந்ததனாலேயே இந்த தீவிபத்து ஏற்பட்டதென பொலீஸார் தெரிவித்தனர்.

# அட்டைகளையும், புழுக்களையும் நவீன சிகிச்சைக்கு பயன்படுத்தலாம்

## அமெ. மருத்துவர்கள் தெரிவிப்பு

நியூயோர்க், ஓக. 27

அட்டை என்று அழைக்கப்படும் ரத்தத்தை உறிஞ்சும் ஒட்டுண்ணியும், புண்களில் உள்ள சீழையும், அழுக்குகளையும் தின்னும் புழுக்களையும் இனி நவீன கால மருத்துவத்திலும் பயன்படுத்துவது என்று மருத்துவ உலகம் தீர்மானித்திருக்கிறது - என அமெரிக்க மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையின் போது ஏற்படும் காயங்களை, குறிப்பாக சர்க்கரைநோயால் பாதிக்கப்படும் நோயாளிகளின் காயங்களை வேறு பக்கவிளைவுகளை இல்லாமல் குணப்படுத்த புழுக்களையும், அட்டைகளையும் பயன்படுத்தலாம் என்ற முடிவுக்கு மருத்துவ உலகம் வந்திருக்கிறது. இதை அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெறும் மருத்துவ மாநாட்டில் விவாதிக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஒருவரைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சுவதற்கு முன்னால் அவருடைய உடலில் ஹிருடின் என்ற கூட்டு திரவத்தைச் செலுத்துகிறது அட்டை. அட்டை கடிக்கும்போதே அதன் வாய் வழியாக இந்த ஹிருடின், கடிபட்டவரின் ரத்தத்தில் கலக்கிறது. கடித்த இடத்தில் மரத்துப் போகவும், ரத்தம் உரையாமல் இருக்கவும் இது உதவுகிறது. இது கடிபட்டவருக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கூடத் தருகிறது.

இச்செயலுக்குப் பிறகே அட்டை மனிதரையோ, பிராணிகளையோ கடித்து, கெட்டுப்போன ரத்தத்தையோ, அளவுக்கு அதிகமான ரத்தத்தையோ குடிக்கிறது. 20 நிமிடத்துக்குள் அட்டை தன்னுடைய வேலையை முடித்துவிடுகிறது. கடிபட்ட இடத்திலிருந்து அடுத்த 24 மணிநேரம் வரையிலும் கூட ரத்தம் வந்துகொண்டே இருக்கும்.

சர்க்கரை நோயாளிகளின் சீழ்பிடித்த, அழுகிப்போன புண்களைச் சுத்தப்படுவதில் தலைப்பிரட்டை புழுக்கள் சிறந்து விளங்குகின்றன. இதனால் புண்கள் வேகமாகக் குணமடைவதுடன், உறுப்பும் பாதுகாக்கப்படுகிறது. இந்த புழுக்கள் பிறகு வீட்டு ஈயாக மாறுகிறது. மருத்துவர்களால் தொட்டுச் சுத்தப்படுத்த முடியாத புண்களை இவ்வாறு அட்டையும், புழுக்களும் உறிஞ்சியும், உண்டும் சுத்தப்படுத்திவிடுகின்றன. என்கின்றனர். அமெரிக்க மருத்துவர்கள்.

(க-8)

# நிலவில் குடியிருப்புகளை அமைப்பதற்கான ஆய்வுகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது 'நாஸா'

வாஷிங்ரன், ஓக.27

நிலாவுக்கு மனிதனை அனுப்பி நடந்து பார்த்துவிட்டு மீண்டும் பூமிக்கு திரும்பும் வழமையான சுற்றுப்பயணமெல்லாம் இனிமேல் நடைமுறைக்குதவாது. அதற்கும் மேலாக நிலவில் வீடுகட்டி குடியிருக்க வேண்டுமென அமெரிக்கா ஆசைப்படுகிறது. இதற்கான ஆய்வுகளை முன்னமே ஆரம்பித்த அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாஸா', தற்போது அதன் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த திட்டமிட்டுள்ளது.

நிலவில் மனிதன் குடியேறுவதற்கு தகுந்த இடம் எது என்பதைக் கண்டு பிடிப்பதே 'நாஸாவின்' முதல் கட்ட நடவடிக்கை ஆகும்.

நிலாவில் மனிதன் வசிப்பதற்குத் தேவையான காற்றையும், மின்சாரத்தையும் உற்பத்திசெய்ய வேண்டும். அதற்கு பயன்படும் கனிமங்கள் நிலாவில் எந்த இடத்தில் அதிகமாகக் கிடைக்கும் என்று ஆய்வு செய்யப்படுகிறது.

இதற்காக விண்வெளியில் நிறுவப்பட்டுள்ள புஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கிக் கருவிகள் மூலம் நிலாவின் ஒவ்வொரு பகுதிகளையும் துருவித் துருவி ஆய்வு செய்கிறது அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவொன்று.

அந்த குழுவில் இடம்பெற்று இருப்பவர் புருஸ் ஹாப்ஜே பிட்ஸ்பர்க். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த... கோள் ஆய்வு விஞ்ஞானியான இவர், தங்கள் ஆய்வு பற்றி நிருபர்களிடம் கூறியதாவது:-

நிலாவில் இல்மனைட் என்ற கனிமம் எந்த இடத்தில் குவிந்து கிடக்கிறது என்று விசேட தொலைநோக்கி மூலம் ஆய்வு செய்து வருகிறோம்.

இல்மனைட் [illegible] டைட்டானியம் [illegible] ஆகும். ஏற்கனவே அப்பல்லோ ரொக்கெட்டுகள் மூலம் நிலாவில் இருந்து கொண்டு வரப்பட்ட கல், மணலை சோதித்தபோது நிலாவில் இல்மனைட் இருப்பது தெரிய வந்தது.

இந்த இல்மனைட்டில் ஒக்சிஜன், ஹைட்ரஜன், ஹீலியம் ஆகியவை இருக்கின்றன. இல்மனைட்டை நாம் சூடாக்கும்போது அதில் இருந்து தீப்பற்றக்கூடிய வாயு கிடைக்கும். அதை எரியவைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும்.

இல்மனைட்டில் உள்ள இரும்பு மூலம் நிலாவில் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான கம்பிகள் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யலாம்.

நிலாவில் இல்மனைட் அதிகமாகக் கிடைக்கும் 3 இடங்கள் இப்போது தேர்வு செய்யப்பட்டுள்ளன.

1970ஆம் ஆண்டுகளில் 'அப்பல்லோ-15', 'அப்பல்லோ-17' ஆகிய விண்கலங்கள் நிலாவில் தரை இறங்கிய இடங்களில் இல்மனைட் அதிகமாக இருப்பதாக அங்கு சென்றுவந்த விண்வெளி வீரர்கள் தெரிவித்தனர். அந்த இரு இடங்களையும் விசேட தொலைநோக்கி மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இல்மனைட் தாதுப் பொருள் அந்த இரு இடங்களிலும் எந்த அளவுக்குப் படிந்துள்ளது, எவ்வளவு காலம் அவற்றை வெட்டி எடுக்கலாம் என்பதையும் கணக்கிட்டு வருகிறோம்.

[illegible] இரு இடங்களுக்கும் நமது விண்வெளி வீரர்கள் ஏற்கனவே சென்று வந்து இருப்பதால் அவை தகுதியான, வசதியான இடங்களாக எங்களுக்கு தென்படுகிறது.

இந்த இரு இடங்களைத் தவிர சுமார் 42 கிலோமீற்றர் அகலமான ஒரு பெரிய பள்ளமும் ஆய்வில் உள்ளது. சந்திரனின் மத்தியரேகைப் பகுதியிலுள்ள இந்தப் பள்ளம் 'அரிஸ்டார்கஸ்' என அழைக்கப்படுகிறது.

சுமார் 2ஆயிரம் அடிஉயரமுள்ள இறுகிய லாவா குழம்புகளால் சூழப்பட்ட இடத்தில் இந்த பள்ளம் இருக்கிறது. எரிமலையால் உருவான இந்த பள்ளத்தில் இருந்த நாலாபுறமும் சிதறிய குழம்பில் பலவகையான கனிமங்கள் இருக்க வாய்ப்பு இருக்கிறது. இந்த இடத்தையும் ஆய்வு செய்கிறது.

எங்கள் ஆய்வின் முதல்கட்ட முடிவு எதிர்வரும் ஒக்டோபர் முதல் வாரத்தில் தெரியவரும்.

-இவ்வாறு விஞ்ஞானி புருஸ் ஹாப்ஜே கூறினார். (க-8)

## உலக அரங்கில்

### நதி நீர் இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

புதுடில்லி,ஓக.27

இந்தியாவில் முதற்றடவையாக நதி நீர் இணைப்பு ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்தாகியுள்ளது.

பிரதமர் மன்மோகன்சிங்கின் அலுவலகத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

முத்தரப்பு ஒப்பந்தமாக, உத்தரப் பிரதேச முதல்வர் முலாயம் சிங், மத்தியப் பிரதேச முதல்வர் பாபுலால் கவுர், மத்திய நீர்வள அமைச்சர் பிரிய ரஞ்சன் தாஸ்முன்ஷி ஆகியோர் கைச்சாத்திட்டனர். (3)

### பீகாரில் தேர்தல் நவம்பரில்

புதுடில்லி,ஓக.27

பீகாரில் எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் கோபாலசாமி தெரிவித்தார்.

சென்னை வந்த அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இத்தகவலை வெளியிட்டார்.

தமிழகத்தில் போலி வாக்காளர்களைச் சேர்க்கக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்புமலர் - 27-08-2005

## பிணி ஒன்றும் சேரா பிறவி கெடுத்தாளும்



பரம்பொருள் ஒருவர். அவர் பற்பல தேசங்களில் பற்பல நாமங்களோடு வழிபாடு செய்யப்படுகிறார். இதனை "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற தேன் வாசகத்தால் இனிது அறியலாம். அந்தப் பெருமான் மக்களுக்கு வாழ்வு மலர்வதற்காகப் பற்பல செயல்களைப் புரிந்து பற்பல பெயர்களைத் தாங்குகிறார். உலக மக்களை - உயிர்களைக் காப்பதற்காக எடுத்த வடிவம் ஸ்ரீ நாராயணர் வடிவம். அரன்வேறு அரிவேறு என்பது அறியாமையாகும்.

**ஏற்றான் புள்ளூர்ந்தான் எயிலெரித்தான்**
**மார்விடந்தான்**
**நீற்றான் நிழல் மணிவண்ணத்தான் -**
**கூற்றொருபால்**
**மங்கையான் பூ மகளான் வார்சடையான்**
**நீண்முடியான்**
**கங்கையான் நீள்கழலான் காப்பு**

என்கிறார் பொய்கையாழ்வார். இருவரையும் ஒருவடிவத்தில் காண்கிறார். யார் எத்தெய்வத்தைக் கும்பிட்டாலும் - ஆதரித்தாலும் அவை என்னையே வந்தடைகின்றன என்பது கீதை வாக்கியம். இதன் பொருளென்ன? வழிபாடுகள்- பணிகள் எல்லாம் ஒரு பரம்பொருளிடமே சென்றடையும் என்பதாகும்.

உயிர்களை வழிப்படுத்துவது பக்த ரட்சகனாகிய எம்பெருமானின் செயல். அவை ஐந்து தொழில்கள். நாம் சீவியத்துக்காகத் தொழில்செய்கிறோம். ஆண்டவன் எம்மை அஞ்ஞானத்தை நீக்கி - மெய்ஞ்ஞானத்தைப் பெறச் செய்வதற்காக ஐந்துதொழில் செய்கிறான்.


எப்போது அதர்மம் வெளிப்படுகிறதோ அப்போது- அங்கே யான் வந்து தோன்றுவேன் என்பது கண்ணன் வாக்கு. அந்தவகையிலே வெவ்வேறிடங்களில் வெவ்வேறு பெயருடன் கிருஷ்ணபரமாத்மா காட்சியளிக்கிறார்.

வழிப்போக்கர்களுக்கு இரண்டு பாம்புகளாகவும் - வயோதிபராகவும் சிறுவனாகவும் காட்சிகாட்டி நாகதம்பிரான் என்ற பெயரோடு மக்களால் போற்றப்பட்டு வந்தவர் ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமான். அவருக்கு ஒரு சித்திரத் தேர் பெரிதாக ஆக்கப் படவேண்டுமென்ற அடியார்களின் ஆசை இன்று நிறைவேறுகிறது. பரம்பொருளாகிய ஸ்ரீநாராயணப் பெருமான் இன்று (27-08-2005) சித்திரத் தேரேறி வருகிறார். பக்தகோடிகள் தரிசனைசெய்து வேண்டிய வரங்களைப் பெறுங்கள் கைமேற் பலன் கிடைக்கும்.

**பணிநாளும் நெஞ்சே**
**பரம பரம்பரனை**
**பிணி ஒன்றும் சாரா**
**பிறவி கெடுத்தாளும்**
**மணிநின்ற சோதி**
**மதுசூதன் என்னம்மான்**
**அணிநின்ற செம்பொன்**
**அடலாழியானே**

என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி.

அன்பன் அருட்கவி
சீ.விநாசித்தம்பி
(தேவஸ்தானக் காப்பாளர்).





## மங்களங்கள் தந்து காப்பான்

**இருபாம்பாய்க் காட்சிதந்து வாக்குரைத்து**
**எழிலான கோயில்கொண்ட நாகமூர்த்தி**
**பெருநாக வரதநாரா யணன்தன்**
**பேரொளி சேர் சிற்பத்தேர் காணவாரீர்**
**அருளான அற்புதங்கள் பல இயற்றி**
**அடியார்க்கு நல்வரங்கள் பலகொடுத்து**
**உருஓங்கும் பார்மகள்பூ மகளினோடு**
**உல்லாசக் காட்சிதந்து வரம்கொடுப்பான்**

**இறந்த ஒரு பாலகனுக்குயிர் கொடுத்து**
**இருண்டகண் குருடனுக்குப் பார்வை நல்கி**
**சிறந்தபல சந்தானச் செல்வம் தந்து**
**தீராத நோய்கள்பல தீர்த்துமக்கள்**
**பிறந்த பயன் பெறுவதற்கு ஞானமூட்டும்**
**பெருமானார் திருவடியை வந்துபோற்றி**
**நிறைந்த பலன் பெற்றிடுங்கள் நீலவண்ணன்**
**நித்தியசுப மங்களங்கள் தந்து காப்பான்.**

செல்வி தி.வரதவாணி

## பிரதம குருக்களின் ஆசிச் செய்தி



சுமார் பத்து வருடங்களுக்கு மேலான ஆண்டுகள் ஸ்ரீநாக வரத நாராயணரின் மகோற்சவக் கிரியா பூசைகளைச் செய்து வருகிறேன். எம்பெருமான் ஒரேமூர்த்தி. ஒருநாள் ஒரு வண்ணமாகக் காட்சி தருவதைக் காண்கிறேன். பூசை நேரங்களில் என்னையே மறந்துவிடக்கூடிய அருட்காந்தம் என்மேல் வந்து விழுகின்றது. பூசை நேரங்களில் அடியார்களின் ஆனந்தப் பரவசநிலையைக் காணும்போது எம்பெருமானின் அருட்பிரகாசம் எப்படிச் செறிந்துள்ளது என்பது விளங்கும். அத்தகைய பரமபிதாவாகிய ஸ்ரீநாகவரத நாராயணப் பெருமான் இன்று புதிய சித்திரத் தேரில் காட்சி தருகிறார். அன்படியார்கள் அனைவரும் வந்து தரிசனை செய்து சுகம் பெறுவார்களாக.

சிவாகம ஞானமணி
சிவஸ்ரீ **பரம.சண்முகசுந்தரக்குருக்கள்.**

## தொண்டர் சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

**தரிசித்து நலம் பெறுவோம்**
**நாராயணா என்றால் நாக்குளிரும்**
**அதைப்பாராயணம் செய்ய மனங்குளிரும்**

எல்லாம்வல்ல பரம் பொருளாகிய நாக வரத நாராயணபெருமான் சித்திரத் தேரேறி அடியார்களுக்கு அனுக்கிரகம் செய்ய வீதி வலம் வருகிறார் மும்மலங்களைச் சங்காரம் செய்து அடியார்களைக் காப்பதே தேர் உற்சவத்தின் தத்துவமாகும். எம்மைச் சூழ்ந்த மாயா இருள் நீக்கினால் தூயஞான நிலையடையலாம் மனதில் பதிவு கொண்ட காம, குரோத, மோக, லோக, மதமாற்சரியமாகிய ஆறு குற்றங்களும் நீங்கும் மக்களிடையே சமரசமும் சமாதானமும் ஏற்படும். எங்குமாய் எல்லாமாய் அறிவாய் அருள்ஒளியாய் நிற்கும் பெருமான் எல்லாச் சீவராசிகளிடத்தும் செறிந்து நிற்கிறார் என்ற தெளிவு ஏற்பட்டால் மாத்திரமே மக்களிடையே சமாதானம் ஏற்படும் வாய்ப்பு நிலை தோன்றும்.

இத்தகைய ஒளிமயத்தை உலகிற்குக் கொடுப்பதற்காகப் புதிய சித்திரத் தேரில் அமர்ந்து காட்சி தரும் ஸ்ரீநாகவரத நாராயணரைத் தியானத்துடன் தரிசித்து நலம்பெறுவோமாக.

**ஹரி ஓம் நமோ நாராயணாய.**

**வி.ஸ்ரீதரன்** (செயலாளர்)


## தொண்டர் சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

புதிய சித்திரத் தேர்

**ஸ்ரீ** நாகவரத நாராயண தேவஸ்தானத்தின் புதிய சித்திரத் தேர் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா அவர்களின் சிந்தனைக்கு அமைவாகக் குறுகியகாலத்தில் அழகிய முறையில் புதுப்பொலிவுடன் செய்துமுடிக்கப்பெற்று இன்று சித்திரத் தேர் விழா நடைபெறுகிறது.

இச்சித்திரத் தேர் திருநெல்வேலி வாழ் திரு.இராசதுரை பிரபாகரன் அவர்களால் அழகிய சிற்ப ஓவியங்கள் நிறைந்தனவாக உருவாக்கப்பட்டுப் புதுப்பொலிவுடன் சித்திரத் தேராகக் காட்சிகொடுக்கின்றது. குறுகிய காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் சித்திரத்தேரை மிகவும் அழகிய முறையில் செய்து ஒப்படைத்த பெருமை திரு.இ.பிரபாகரன் அவர்களையே சாரும். இச்சித்திரத் தேரை அடியார்கள் கண்டுகளிக்கும் வாய்ப்பினைப் பெற்றமை ஒரு வரப்பிரசாதமாகும். இச்சித்திரத் தேர்விழா சீருஞ்சிறப்புமாக நடைபெற நாக வரத நாராயணனின் பாதாரவிந்தங்களை வணங்கி நாளைய பொழுது அனைவருக்கும் நல்ல பொழுதாக அமையவேண்டுமென ஸ்ரீ நாகவரத நாராயணனைப் பிரார்த்திப்பதோடு, அனைவருக்கும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு.ம.பத்மநாதன்**
தொண்டர்சபைத் தலைவர், முன்னாள் உப அதிபர், யா/அருணோதயக் கல்லூரி.




### விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

**ஈஸ்வரன் ரேடர்ஸ்** 69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 2813 021 222 3048, 3590.

மங்கையர் நாளும் விரும்பி நாடும் நகையகம் **அசோகா நகை அகம்** இல.111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தங்க வைர நகைகளின் அழகுமாளிகை **சாரங்கா நகைமாடம்** 157/1, 177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்.

**அ.ச.ஆறுமுகம் அன் சன்ஸ்** இல.81, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். பல்பொருள் வாணிபம்

என்றும் மாறா 22 கரட் ஆபரணங்களைப் பெற **நியூ நகுலா ஜுவல்லறி** 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுத்தமான உணவு வகைகளுக்கு **விநாயகர் சைவ உணவகம்** கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

**நரஞ்சன் போட்டோ அன் வீடியோ** கறுப்பு வெள்ளை கலர் படங்கள் B.W., NPI, PIC, PPI, Colour NIC என்பன பிடித்துத் தரப்படும். **நரஞ்சன் தையலகம்** பெண்களுக்கான சகலவிதமான ஆடைகளும் தைத்துத் தரப்படும். கூட்டுறவு வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி.

**விமல் போட்டோ அன் வீடியோ** கலர்ப் படங்கள், வெளிப் புறப்பிடிப்பு, கறுப்பு வெள்ளை, அடையாள அட்டைப் படம், பாஸ்போட் படம், படம் பெரிதாக்கல். அளவெட்டி மேற்கு, அளவெட்டி. தொ.பே. 077 6018 803, 0777 6305183.

**ரூபா பன்முக வர்த்தகம்** 104A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (C/44790)(50)

விதம்விதமான அழகு நகைகளின் கலையகம் **வினோ நகைப் பூங்கா** 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிறீ சிவாஞ்சனா நகையகம்** நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம் இல.149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 5481

நவநாகரிக ஆடைகளின் தெரிவிற்கு **சிமாட்டி புடைவை அகம்** இல.122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**சிறீ நதியா நகை மாளிகை** இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். இணை நிறுவனங்கள்: சாருயா சிறீரூபா நகைமாளிகை கிளை: இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.2709.

மனம்விரும்பிச் சுவைத்திட **கல்யாணி கிறீம் ஹவுஸ்** இல.78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**விநாயகர் களஞ்சியம் அன் தொலைத் தொடர்புசேவை** கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி. 060 221 2878, 021 459 1935 0094602212878 00944591935 இன்ரநெற் வசதியும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையை முறை வழுவாது படிப்பதும் கேட்பதும் சிறப்புப் பலன் கிடைக்க உதவும்

**இன்று கிருஷ்ண ஜயந்தி. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



திருக்கோயில்களில் ஆன்மாக்களுக்கு அருளும் வடிவங்களாக உருவத்திருமேனி கொண்டு விளங்கும் இறைவனுக்கு இயற்றப்படும் பூசை முறைகளை ஆகம சாஸ்திரங்கள் கூறிநிற்கின்றன. அதன்வழி சகல கர்மாக்களையும் நிறைவுறும்படி செய்வதாலும் பக்தனுக்கு ஆத்ம ஞானத்தைக் கொடுப்பதாலும் பூசை என் சிறப்புப் பெயர் பெறுகின்றது. இது நன்மையைத் தந்து பாவத்தை போக்குகின்றது. சகலவிதமான வேள்விகளின் பயன்களையும் தருவதுடன் மக்களின் நன்மை (லோகக்ஷேமார்த்தம்) கருதி நித்தியமும் நடைபெறுகின்ற நித்திய பூசையின் பெருமை அமைகின்றது. இதனையே பரார்த்த பூசை எனவும் கூறுவர்.

இத்தகைய பரார்த்த பூசை வகையில் பயனை அடைதலையும் அனைத்து மக்களின் நன்மை கருதியும் செய்யப்படுகின்ற வழிபாடுகளுள் அக்கினியில் இறைவனை எழுந்தருளச் செய்து அவிசொரிந்து ஆகுதி நல்கி அளவற்ற பலன்களைப் பெறத்தக்கதாக ஹோமங்கள் செய்யப்படுவது இந்துசமய மரபாகும். அக்கினியில் சொரியப்படும் சகல திரவியங்களும் இறைவனைச் சென்றடைகின்றன என்பது எமது நம்பிக்கையாகும். சுத்தமான திரவியங்களால் உளப்பூர்வமாக நாம் இறைவனுக்குச் செய்யும் சகல வழிபாடுகளும் சிறந்த பயனைத் தரும் என்பது நிதர்சனமாகும்.

இந்தவகையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவதரித்த புண்ணிய தினமாகிய ஆவணி மாத ரோகிணி நட்சத்திரத்திலே ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி தின நன்னாளில் செய்யப்படுகின்ற மகிமையும் மகத்துவமும் மிக்க ஸ்ரீமந் பகவத் கீதா ஹோமம் நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைபெறவேண்டி நடத்தப்படுகின்றது.

ஸ்ரீமந் பகவத்கீதை ஆனது மகாபாரதம் என்னும் பதினெட்டு பர்வதங்களைக் கொண்ட இதிகாச இலக்கியத்தில் பீஷ்ம பர்வதத்தில் பதினெட்டு அத்தியாயங்களையும் எழுநூறு மந்திர வடிவிலான சுலோகங்களையும் கொண்டு சாஸ்திர நூலாகவும் சுருதி நூலாகவும், ஸ்மிருதி நூலாகவும் விளங்கும் தனித்துவமான சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

**ஸ்ரீவத்ஸ வ.இராஜேஸ்வரக் குருக்கள்**
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், யாழ். வண்ணை.

அவதார புருஷனான ஸ்ரீ கிருஷ்ண பகவான் மனித வாழ்வியலின் கட்டமைவையும், உலகின் தோற்றம், நிலை, மறைவு எனும் தன்மையையும் பஞ்ச கிருத்தியங்களுக்கும் காரணமாக, அறிவின் வடிவாக அமைந்தவரும், பிறவிப் பிணியைத் தீர்ப்பவருமாக விளங்கும் பரமாத்மாவாகிய ஸ்ரீ கிருஷ்ணருடைய புகழையும், அர்ச்சுனனுக்கு ஏற்படுகின்ற ஐயங்களைத் தெளிவுபடுத்துகின்ற இயல்புகளைத் தன்னகத்தே கொண்ட சம்பாசனை வடிவமாக அமைவதும், மந்திர சாஸ்திரங்களில் திளைத்த பலரால் பல்வேறு உரைகள் எழுதப் பெற்று உபநிடதமாகவும் பிரம்ம வித்தை நூலாகவும் யோக சாஸ்திரமாகவும் இந்தப் பகவத்கீதை விளங்குகின்றது.

இயற்கை அனர்த்தங்கள், போர்க் காலங்கள், ஆபத் காலங்கள் மற்றும் துன்ப வேளைகளில் அவற்றிலிருந்து விடுபடவும் வாழ்க்கைக்குத் தேவையான அறம், பொருள் இன்பம், வீடுபேறு எனும் புருஷார்த்தங்களைப் பெறவும் பகவத் கீதையை முறை வழுவாது படிப்பதும் கேட்பதும் தக்க குருவின் துணைகொண்டு ஹோமம் செய்வதும் இக்கலியுக காலத்தில் சிறப்பான பலன்களைப் பெறமுடியும்.

பல்வேறு பெருமைகள் மிக்க ஸ்ரீமந் நாராயணனே அறிவு வடிவமாகவும் ஞானவடிவமாகவும் இருப்பவன். இவ்விதமே ஸ்ரீமந் பகவத் கீதையும் ஞானவித்தையின் வடிவமாக அமைந்துள்ளது. பரமார்த்திக யோகங்களை அளிக்கவல்ல ஸ்ரீமந் நாராயணன் தனது எல்லா அவதார நிலைகளிலும் துஷ்டரை அழித்து தர்மத்தை நிலைநாட்டித் தன்னை சரணடைந்தோர்க்கு இஹ பர சுகங்களைக் கொடுத்து ரட்சித்து அருளுகின்றார்.

இன்றைய கிருஷ்ண ஜயந்தி நன்னாளில் நாம் கண்ணனைச் சரணடைவோம். எமது துன்பங்கள் நீங்கி சுபீட்ச வாழ்வு பெறப் பிரார்த்திப்போம்.

**"கண்ணன் கழலினை நண்ணும்
மனமுடையீர்
எண்ணும் திருநாமம் திண்ணம்
நாராயணமே"**

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு முன்பள்ளி மாணவரிடையில் போட்டி

ஊர்காவற்றுறை,ஓக.27

அடுத்தமாதம் 12ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிவரை கொண்டாடப்படவுள்ள உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபை பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

முதற்கட்டமாக காரைநகர், ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பிரதேசங்களிலுள்ள முன்பள்ளி நிலையங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஊர்காவற்றுறை பிரதேச முன்பள்ளிகளுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளிலும் -

காரைநகர் பிரதேச முன்பள்ளிகளுக்கிடையிலான போட்டிகள் 10ஆம், 11ஆம் திகதிகளிலும் -

அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பிரதேசங்களிலுள்ள முன்பள்ளி நிலையங்களுக்கிடையிலான போட்டிகள் 14ஆம் திகதி அனலைதீவில் நடைபெறவுள்ளன என்று ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்தராஜா தெரிவித்தார். (எ-16)

## 'நல்லைக் குமரன்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் நல்லைக்கந்தன் திருவிழாக்காலத்தில் வருடந்தோறும் வெளியிடப்படும் 'நல்லைக்குமரன்' மலர் வெளியீட்டுவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தா ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

தொடர்ந்து பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் மலரை வெளியிட்டுவைக்க, அதன் முதற்பிரதியைத் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தினர் பெற்றுக்கொள்வர். தொடர்ந்து பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

இந்நிகழ்வில் மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (எ-203)






## நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம்,ஓக.27

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 18ஆம் நாளான இன்று சனிக்கிழமை மேரிசரோஜா ஜஸ்டினின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

வயலின் பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம் பி.சியாமகிருஷ்ணா, முகர்சிங் எஸ்.விமல்சங்கர் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர். (எ-204)

***


யாழ்ப்பாணம்,ஓக.27

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா 'கந்தபுராணம்' தொடர்சொற்பொழிவு ஆற்றிவருகிறார்.

இதில் இன்று சனிக்கிழமை 'செந்தில் வேலவன்' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார். (எ-204)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பகம்

பதினெட்டாம் திருவிழா



## விளங்கு நல்லூர் தெரியுதடி!



ஆன்மா ஒருபோதும் - கிளியே!
அழியாதது நாங்கள்
வீண்பாவம் விட்டிடடி - கிளியே!
விளங்கு நல்லூர் தெரியுதடி.

காண்பானும் காட்சியும்போய்க் - கிளியே!
கண்டபல பொருளும் விட்டு
மாண்பாகச் சிந்தையிலே - கிளியே!
வடிவேலைப் போற்றிடடி.

- *யோகர் சுவாமிகள்.*

## வேலினைத் தொழுவதென் வேலை

என்றுமென் துணையாய் இருந்தருள் சுரந்து
இருந்தனை இடரெலாம் களைந்து,
நன்றிலும் தீதிலும் நானுனை மறவா
நாயக மானாய் கந்தா,
ஒன்றுநான் அறியா அந்தக னாகி,
உன்வழி காட்டலில் நின்றேன்.
வென்றனன் ஊழை விதியெலாம் கரைந்திட
வேலினைத் தொழுதெழு வேனே

- **முருகனடியான்.**

## உத்தமர் ஆக்கிடாயோ!

*பொய்யர்கள் கூட்டமொன்று
புகழ்ந்துனைப் பாடிப்பாடி
மெய்யடியார்கள் போல
மெல்லவே உலவுகின்றார்
அய்யனே அவர்கள் தம்
அறியாமையிருளை நீக்கி
உய்யவே வழியைக் காட்டி
உத்தமர் ஆக்கிடாயோ?*

- **மூ.க.சிவானந்தம்.**

## சித்திர அழகொளிர் திருநல்லை

*நித்தலும் கோயில் வலம்வந்து
பக்தி செய்தவன் பாதம் பரவி
புத்தியிலவனை இருத்தினாலெம்மை
உத்தம வாழ்வில் உயர்த்துவான்
சத்தியம் இதுவாம் சாராதிருப்பரை
வித்தகத் திறமையால் விரும்பியேந்திட
எத்தனம் செய்யும் எழிலார் குமரனை
சித்திர அழகொளிர் திருநல்லை கண்டனே!*

- **பரமேஸ்வரி சிவராமலிங்கம்.**

## நல்லூரானிடம் இணையில்லாப் பிணைப்பு

நல்லூ ரானிடம் எங்கள்
நம்பிக்கை பாசம் அன்பு
சொல்லில் அடங்காது அதைச்
சொல்லியும் அடங்காது அத்தனை
எல்லை யில்லா இந்த
இணையில் லாத பிணைப்பு
கல்லைக் கனிய வைக்கும்
காதலில் உருக வைக்கும்

- **வ.யோகானந்தசிவம்.**

## ஓங்கார தத்துவன்

குன்றேறி நின்றாடும்
குமரவடி வேலவனே
என்றென்றும் எம்மினத்தை
ஏற்றமுற வாழவைப்பாய்!

நல்லை யெனும்போது
நாவே இனிக்கிறது
தொல்லை துடைத்திடுமுன்
தூயவொளி தெரிகிறது!

ஓங்கு தமிழ் வளர்க்கும்
ஓங்கார தத்துவனே!
தாங்கி எமைக்காத்து
தருமம்தனை வளர்ப்பாய்!

- **கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் தனித்தரப்புத்தான் ஐ.தே.க.தொடர்ந்து அதில் உறுதி

## பீரிஸ் தெரிவிப்பு

புலிகளுக்கும் அரசுக்குமிடையில் இடம் பெறப்போகும் பேச்சில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் உறுதியாகவே உள்ளது. இந்த நிலைப் பாட்டில் என்றைக்கும் மாற்றம் ஏற்படாது.

-இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து அவர் கூறுகையில் தெரிவித்ததாவது:-

புலிகளுக்கும் அரசுக்குமிடையில் இடம் பெறப்போகும் பேச்சில் முஸ்லிம் தனித்தரப் பாகக் கலந்துகொள்வது பற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார். ஆனால் அமைச்சரால் உரிய பதிலளிக்க முடியவில்லை ஜனாதிபதியிடம் கேட்டுப் பதில் சொல்வதாகக் கூறினார்.

முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்வது பற்றி அரசு இன்னும் தீர்மானிக்கவில்லை. அப்படியென்றால் முஸ்லிம்கள் தனித்தரப் பாக கலந்துகொள்வதை அரசு விரும்பவில்லை என்றுதான் அர்த்தம்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியோ பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ளவேண்டும் என்பதில் என்றும் உறுதியாகவே உள்ளது. இது தொடர்பாக அரசு தனது நிலைப்பாட்டை விரைவில் அறிவிக்க வேண்டும் என்றார். (க-3)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

* பெருந்தோட்டத்துறையில் கல்வி, சுகாதாரம், தொழில்பயிற்சி, வறுமை ஒழிப்பு, உட்கட்டமைப்பு, வீடமைப்பு போன்ற துறைகளை மேம்படுத்துவதற்காக மூன்று வருட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளல்.
* அமைச்சுகள் பலவற்றில் அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கு வதற்கான விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிடல்
* மொரட்டுவ, சப்ரகமுவ மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகங்களுக்கு உட்கட்டமைப்புக்குத் தேவையான நிதியை வழங்கல்
* ஜனாதிபதியின் சீன விஜயத்தின் போது ஒப்பந்தங்கள் பலவற்றில் கைச் சாத்திடல். இந்த ஒப்பந்தத்தில் புதிய வெளி விவகார அமைச்சர் அநுரா பண்டார நாயக்கவையும் கைச்சாத்திட அனுமதித்தல். (க-3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.27

1994 ஆம் ஆண்டு பட்டதாரிப் பயிலுநர்களாக பிரதேச செயலகங்களில் பணிபுரிந்து ஆசிரிய நியமனம் கிடைத்தவர்களுக்கான பயிற்சிக்காலம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கற்சுமி கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

உரியவர்கள் சகல ஆவணங்களுடனும் வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-203)

## அரங்காலய நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.27

பெண்கள் பண்பாட்டு மையத்தினால் மாதந் தோறும் நடத்தப்பட்டு வரும் அரங்காலய நிகழ்வின் 11 ஆவது நிகழ்வு இன்று சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த அரங்காலயம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிப்பட்டிருந்தது. (எ-203)

## தொழிற் பயிற்சி சான்றிதழ்

தென்மராட்சி,ஓக.27

வரணி இயற்றாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் கிராம அபிவிருத் தித் திணைக்கள அனுசரணையுடன் நடத்தப் பட்ட தொழிற்பயிற்சிக்கான சான்றிதழ்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சியினை நிறைவுசெய்த பயிலுநர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் சான்றிதழ்களை வழங்கினார்.

இயற்றாலை அ.மி.த.க. பாடசாலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் செ.உமாபாலன், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-117)

## பேராசானுக்கு எம் பிரிய அஞ்சலி



**கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை**

புங்குடுதீவின் புகழ்பூத்த குடியில் தோன்றி யாழ். இந்துவின் மைந்தனாய், ஆசிரியராய், உபஅதிபருமாய், மாணவருக்கு வழிகாட்டியாய், பலதலைமுறை போற்றும் பேராசானாய் விளங்கி மறைந்த பெருமகனாருக்கு எம் பிரிய அஞ்சலிகள்.

ஆசானின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு சபையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*சைவபரிபாலன சபையினர்*

**நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

(சீ/44801)(21.17.15)

## கண்ணீர் அஞ்சலி



மூத்த கல்விமானும், யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபருமான

**கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை**

அவர்கள் (25.08.2005) இறைபதம் அடைந்தமையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:

கலாபூசணம் ஆ.ஜீவரட்ணம் ஸ்தபதி குடும்பத்தினர்.

ஆறுமுக சிற்பாலயம்,
திருநெல்வேலி.

(39331)(32-21-17-15)

## இதய அஞ்சலி



*யாழ்.இந்துக் கல்லூரியின் மூத்த மைந்தன்*

**மூதறிஞர் க.சிவராமலிங்கம்பிள்ளை**

யாழ்.இந்துக் கல்லூரியின் மாணவராக, ஆசிரியராக, உப அதிபராக, பழைய மாணவர் சங்கத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்த எங்கள் பேராசானின் மறைவு இந்துவின் மைந்தர்களை ஆற்றோனாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் மறைவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**யாழ்.இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**யாழ்ப்பாணம்.**

(சீ/44798)(21.15.17)


## கார் வாடகைக்கு (குளிரூட்டியது)

ஆங்கில இலக்கம் கொண்ட புத்தம் புதிய கார் வாடகைக்கு உண்டு



- திருமண வைபவங்கள்
- சுற்றுலாக்கள்
- விஷேட வைபவங்கள்

ஆகிய அனைத்துத் தேவைகளுக்கும் எம்மை நாடலாம்.

**தொடர்பு: 0777312690,**
**0777222180,**
**0777283595,**
**021 222 6634.**

முகவரி: **பாம்பீச் ரெஸ்ரோறன்ற்,**
49, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(39243)(26-14-15)


## விளையாட்டுப்போட்டி

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மகிழ்விக்கும் படியாக

**கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தினால் விளையாட்டுப் போட்டி நடத்தப்படவுள்ளது.**

இடம்: கொட்டடி கடற்கரைப்பகுதி, பருத்தித்துறை
காலம்: 27.08.2005
நேரம்: 3 மணி

(39336)(21.17.15.)

## உதவியாளர் தேவை

*அலுவலக, விநியோக வேலைகளில் ஆர்வமுள்ள, 25 வயதுக்கு உட்பட்ட, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த, ஆண் உதவியாளர் ஒருவர் உடனடியாகத் தேவை. ஓரளவு ஆங்கில, கணனி அறிவுடன், யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத் தக்கது.*

*விண்ணப்ப முடிவு திகதி: 05.09.2005*

**உங்கள் சுயவிவரக்கோவை அனுப்ப வேண்டிய முகவரி,**
**T.N.T கூரியர் சேவை,**
**56/15, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(39325) (3221.1517)

## விற்பனையாளர் தேவை

**பாடசாலை உபகரணங்கள் வாகனத்தில் கொண்டு சென்று விற்பதற்கு விற்பனையாளர் தேவை. A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

தொடர்பு:- **கஜன்**
அரசடி வீதி,
திருநெல்வேலி-கிழக்கு

**T.P.- 021 2226678, 0777917679**

(21.17.15) (39324)


Dialog GSM

வெகுமதிகள்! அளப்பரிய பரிசில்கள்!

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim(Connection) இணைப்புகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்.

சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால்சேவைகள் உள்நாட்டு, வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்.

kit எந்நேரமும் உன்னுடன்..

WESTERN UNION | பணப் பரிமாற்றம்

ஊடாக உலகின் எப்பாகத்தில் இருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளும் எமது வாடிக்கையாளர்களுக்கு அளப்பரிய பரிசில்கள்!

நாடுங்கள்:


SRI MURUGAN

Tele Communication & Agency Post Office

303, K.K.S. Road, Jaffna. T.P.: 021 222 5392, Fax: 222 3214. E.mail: srimurugan@eureka.lk

(C/44796)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 12 . 01 . 1942

விண்ணில் 28 . 07 . 2005

அமரர்

# கணபதி அன்னலட்சுமி

திதி : 27.08.2005

பாசத்தோடு நீயிருந்தாயம்மா
நேசம் காட்டி உறவுகளை அணைத்தாயம்மா
செல்லக் கதைபேசி கூடியிருந்தாயம்மா
சொல்லாமல் எமைவிட்டு எங்கே சென்றாயம்மா
கணவனோடு பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள் உன் பிரிவால் தினம் வாடுகின்றனர்.

ஓம் சாந்தி!

[illegible] மேற்கு
அன்னுங்கை

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகோயில்
வருடாந்த மகோற்சவம் 2005

- 02-10-2005 கொடியேற்றம்
- 16-10-2005 இரதோற்சவம்
- 17-10-2005 சமுத்திரத் தீர்த்தம்
- 18-10-2005 பட்டுத்தீர்த்தம்

இன்று 27-08-2005,
ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி (இரவு)



ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

வீடியோ, புகைப்படப்பிடிப்பு, அல்பம் தயாரித்தல்
மற்றும் குளிரூட்டிய வான், கார் சேவை.

HOTLINE - 0777-739673

யாழ்நகரில்
நல்லூர் ஒளியருவி வீடியோ
B440, பருத்தித்துறை வீதி.
நல்லூர்.
021-2222604

வடமராட்சியில்
ஸ்ரீ வல்லிபுரா போட்டோ
புலோலி தெற்கு,
புலோலி
021-2263459


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



வசீகரன் ஊர்ஜிதா தம்பதியரின்
செல்வப் புதல்வன்

## வ.ஜனந்தன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (27.08.2005) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அத்தைமார், சித்தப்பாமார், மாமன்மார், பூட்டன், பூட்டி, மச்சாள்மார், மச்சான் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஜனாக்குட் டியை களையோடை கண்ணகை அம்பாள் அருளால் பல்கலையும் பெற்று செல்வத்துடன் பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
அப்பப்பா [சந்திரன்],
அப்பா, அம்மா.

நவாலி அரசடி,
மானிப்பாய்.
(39359) (38-11-34)

# அகவை 50 இல்



திருமதி சர்வேஸ்வர லலிதா கமலநாதன் (அன்ரி)

27.08.2005 அகவை 50 இல் கால்பதிக்கும் எமது அன்புக்குரிய அன்ரி திருமதி சர்வேஸ்வரலலிதா கமலநாதன் அவர்களைப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

சந்திரன் [மருமகன்], நண்பர்கள்
[3 ஆம் வருட நாடகமும் அரங்கியலும் - யாழ்.பல்கலைக்கழகம்].

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(39356) (38-11-34)

We Serve

சிறுப்பிட்டி கிழக்கு முன்மாதிரிக் கிராம அபிவிருத்திக் குழுவின் அனுசரணையுடன்
அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும்

## இலவச மருத்துவமுகாம்

இடம்:-யா/சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை
காலம் :-28.08.2005 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- முற்பகல் 10 மணி

குறிப்பு :-வைத்திய நிபுணர்களின் வைத்தியப் பரிசோதனைகளும் சலரோக நோய்த்தடுப்பு ஆலோசனைகளும் ,அதற்கான சல, இரத்தப் பரிசோதனைகளும் இடம்பெறும்.

க.ஸ்ரீஸ்கந்தராசா (தலைவர்),
சி.யோகசிங்கம் (செயலாளர்).

அச்சுவேலி வட்ட
லயன்ஸ் கழகம்.

# இதய அஞ்சலி

## பேராசான் சிவராமலிங்கம்



சைவத்தமிழ் உலகிற்கு சான்றோனாய் நின்ற பெருந்தகையின் ஆத்மா சாந்தியடைய துர்க்கை அம்பாளை இறைஞ்சுகிறோம்.

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி J.P. தலைவர்
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.
(A-44819) (38-11-34)


ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல் சியாம், அஸின், பூஜா, லைலா நடித்த

உள்ளம் கேட்குமே

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(A-43380)

மனோகரா யாழ்ப்பாணம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

அந்நியன்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.
(பு.நே.)
(A-44110)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

தாஸ் (சீல்ஸ்)
(கடைசி வாரம்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

அடுத்த வெளியீடு
கஜனி
(A-41187)

நாதன்ஸ் சினிமா
ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்

இங்கிலீஸ்காரன்

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(A-43363)


# மரண அறிவித்தல்

## வயிரவிப்பிள்ளை சின்னையா

(ஓய்வுபெற்ற அரசினர் வைத்தியசாலை ஊழியர்)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவிப்பிள்ளை சின்னையா அவர்கள் நேற்றுமுன்தினம்(25.08.2005) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அமரர்களான சரவணமுத்து, சின்னப்பிள்ளை (பாக்கியம்) மற்றும் அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் பாக்கியராணி, தங்கரூபன் (நாதன்-C.T.B), சற்குணநாதன் (லண்டன்), பாக்கியநிதி, பாக்கியலிங்கம் (மேற்பார்வையாளர்-யாழ்.போதனா வைத்தியசாலை), நகுலேந்திரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), இராசயோகம் (ப.நோ.கூ.சங்கம்- பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் துரைசிங்கம், தயாநிதி, புஸ்பலதா (லண்டன்), குணபாலசிங்கம்,கருணேஸ்வரி,ரேவதி, நிர்மாலினி மற்றும் துரைரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மாமனாரும்.

இரத்தினவேல், சுபாங்கனி ,காலஞ்சென்ற சுபாகரன் மற்றும் கிரிகரன், புஸ்பகரன், சதானந்தன், சுவேதா, சுபைதா (ஜேர்மனி), ஸ்ரீகோகிலன், ஸ்ரீ மயூரன், ஸ்ரீ டினோஸ்காந்தன், கஜீவன், கஜானன், கஜலக்சன், கஜீபன், புருசோத்தமன், அகிபன், துஷாயினி, அகிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் டானியல்ராஜ், ரூத் காரணியா, டினோஜன், இசைப்பிரியா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்களுக்காக நேரியதூ மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

புதுவளவு,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(39388) (38-11-34)

# மரண அறிவித்தல்
## பிற்போடப்பட்டுள்ளது

### தம்பிராசா மதனராசா

27.08.2005 உதயனின் 10 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய தம்பிராசா மதனராசா அவர்களின் மரண அறிவித்தலில் அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2005) சனிக்கிழமை பி.ப. 3 மணி என அறிவிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறும். [illegible]

தகவல்:
பாலசுப்பிரமணியம் [illegible]

[illegible]
உடுப்பிட்டி. (39384) (38-11-34)

# பிற்போடப்பட்டுள்ளது

நாளை (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறவிருந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மாட்டுவண்டிச் சவாரிச் சங்கம்,
ஆவரங்கால் (A-44826) (38-11-34)

க.இராசதுரை,
தலைவர்.

# மரண அறிவித்தல்கள்



## திருமதி நாகபூசணி அம்மா (மங்களம் அம்மா) திருச்சிற்றம்பலம்ஐயா

வேவில்பிள்ளையார் கோயிலடி, வல்வெட்டியை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி நாகபூசணி அம்மா திருச்சிற்றம்பலம் ஐயா அவர்கள் நேற்றுமுன்தினம் (25.08.2005) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருச்சிற்றம்பலஐயரின் பாதிரியாரும், சிவபாக்கியவதி அம்மா, மகாவலி அம்மா, நாகேஸ்வரன் ஐயா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமாரசாமி ஐயா, நீலாயதாட்சி அம்மா ஆகியோரின் மைத்துனியும் கமலநாதன் ஐயா (சுவிஸ்), விஜயலக்சுமி, அமரர் ஜெயலக்சுமி, விக்கினேஸ்வரக் குருக்கள் ஆகியோரின் பாசமிகு தாயாரும். மகாலிங்கசிவக் குருக்கள் (நாயன்மார்கட்டு), சுந்தரேஸ்வரக் குருக்கள் கிஸ்ணவதனி (சுவிஸ்), திலகவதி ஆகியோரின் மாமியாரும் சுதர்சன், பிரியங்கா, கோகுலன், சங்கரி, விக்கியாபரன், துளசிதரன், வித்தியாசாகர், விஜிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று 27.08.2005 அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9 மணிக்கு எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.விக்னேஸ்வரக்குருக்கள்
(மகன் - சமுர்த்தி உத்தியோகத்தர்).

வேவில் வீரகத்திப் பிள்ளையார் கோயிலடி,
வல்வெட்டி.
(39361) (38-11-34)

## திருமதி செல்லப்பா சிவஞானம்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா சிவஞானம் அவர்கள் 23.08.2005 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், ஜெயந்தி, ஜெயந்திரன் (அமரர்), மாலதி (ஜேர்மனி), ஜெயராணி (ஜேர்மனி), சிவசாந்தி (ஜேர்மனி), கலாநிதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிறிசண்முகதேவ், ஜெகதீஸ்வரன், (ஜேர்மனி), தர்மசீலன் (ஜேர்மனி), நித்தியானந்தன் (ஜேர்மனி), ராசேந்திரம் (ஜேர்மனி) அகியோரின் அன்பு மாமியாரும் கஜன், நிரஜா, சர்வஜா, சாழினி, யாழினி, ஜானுயா, சங்கவி, விதுசா, கீர்த்தனா, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
கு. சிறிசண்முகதேவ் (மருமகன்)

பொன்னம்பல வளவு
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
(C/44777) (38-11-34)

## அருணாசலம் திருநாவுக்கரசு

(இளைப்பாறிய அரச அலுவலக உத்தியோகத்தர்)

உடுப்பிட்டி, பொன்னாவில்லாவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் திருநாவுக்கரசு அவர்கள் வியாழக்கிழமை 25.08.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அல்வாயைச் சேர்ந்த லீலாவதிதேவியின் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை) அன்புக் கணவரும் திருமலரின் (கனடா) அன்புத் தந்தையும் மகேந்திரராஜாவின் (முன்னாள் பிரதம பொறியியலாளர், கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்) மாமனாரும் காலஞ்சென்ற துரைராஜா (சமரபாகு), சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் நிஷானந்தன், நித்தியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2005) சனிக்கிழமை பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகள் பி.ப. 3.30 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
புவி.விவேகானந்தன்
(மருமகன்- இலங்கை வங்கி யாழ்ப்பாணம்).

D4, அன்டர்சன் மாடி வீடு,
கொழும்பு - 5.
தொ.பே.இல. 0112593369. (39360) (38-11-34)

## திருஞானம் திருலிங்கநாதன்



(ஓய்வு பெற்ற நிர்வாக சேவை அதிகாரி
(S.L.A.S.) Consultent U.N.D.P

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான திருஞானம் திருலிங்கநாதன் 24.08.2005 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானம்-நாகபூரணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லைநாதன் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் ரோனி (கார்த்திகேயன்)யின் பாசமிகு தந்தையும் களனியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற ஞானபூரணி, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற குகராஜன், காலஞ் சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்றவர்களான சிவராமலிங்கம், கனகசிங்கம் மற்றும் பரமேஸ்வரி, செல்வராஜா காலஞ்சென்ற இந்திரா, சரஸ்வதி, காலஞ்சென்ற தியாகராஜா, சுதந்தரராஜா, சர்மிஷ்டா, விவேகானந்தராசா தவனேஸ்வரி, கணேசராசா - சிறிதேவி, சிறீஸ்கந்தராசா, அருந்ததி, பராசக்தி, கௌரிசங்கர் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.08.2005) சனிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
மனைவி,மகன்.

4, PARKSIDE EASTBURY ROAD,
WAT FORD W D 194 PW, U.K.
(39366) (38-11-34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'சுடர்ஒளி - உதயன்' பத்திரிகைகளின் கிளைப் பணிமனை மீதான தாக்குதல், சுடர் ஒளிச் செய்தியாளர் ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டமை உட்பட ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து நேற்று கொழும்புகோட்டை ரயில் நிலையம் முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது...

# ஐ.தே.கவுக்கு கிடைத்த வெற்றி! ரணில் மகிழ்ச்சிப் பெருமிதம்

கொழும்பு, ஓக.27

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடமே நடத்தப்படவேண்டும் என உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்க ஐக்கிய தேசியக் கட்சி எடுத்த முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இத்தீர்ப்பால் நாம் மட்டுமன்றி இந்த நாட்டின் அனைத்து மக்களும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

-இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடமே நடத்தப்படவேண்டும் என உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியதையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஸ்ரீ கோத்தாவில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடினார். அப்போதே இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த வருடம் நடத்தவேண்டிய ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருடமே நடத்துவோம் என அரசு விடாப்பிடியாக நின்றது. இது மக்களின் வாக்குரிமையை மீறும் செயல் என்பதால் இந்த உரிமையைப் பாதுகாக்க ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இதற்காக மக்கள் சக்தி பாதயாத்திரைகளையும் மக்களிடமிருந்து கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கையையும் நடத்தியது. எமது இந்த முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது.

எமது இந்த முயற்சிக்கு உதவிய அரசியல் கட்சிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். - என்று கூறினார்.

(ஐ-க)

# மோட்டார் சைக்கிள் கொள்ளையர்கள் பெண்ணின் நகைகளை அபகரித்தனர்

## நல்லூரில் இருந்து திரும்பிய வழியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.27

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் நேற்று நடைபெற்ற திருக்கார்த்திகைத் திருவிழாவைப் பார்த்துவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் வழியில் தனது தங்க நகைகளைப் பறிகொடுத்தார்.

ஆலயத்தில் இருந்து இரவு 8.30 மணியளவில் நாவலர் வீதி வழியாக நடந்துவந்துகொண்டிருந்த சுப்பிரமணியம் பவானி என்ற பெண்ணே தனது தங்கத் தாலிக்கொடியையும் தங்கக் கழுத்து மாலையையும் (நெக்லஸ்) வழியில் கொள்ளையர்களிடம் பறிகொடுத்திருக்கிறார்.

இந்தப் பெண் அயல்வீட்டு யுவதி ஒருவருடன் வந்துகொண்டிருந்த சமயம் இலுப்பையடிச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் நெருங்கிவந்து நகைகளை அறுத்துக்கொண்டு நாவலர் வீதிவழியே தப்பிச்சென்றனர் என்று கூறப்படுகிறது.

பெண்ணின் கூக்குரல் கேட்டு அந்தப் பகுதியில் பலர் வந்து கூடியபோதும் கொள்ளையர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

வெள்ளைநிற மோட்டார்சைக்கிள் ஒன்றில் வெளிச்சம் இன்றிவந்த இருவரே தனது தங்க நகைகளை அபகரித்தனர் என்று அந்தப் பெண் தெரிவித்திருக்கிறார். (ஐ-12)

# ஜே.வி.பியினருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது. பல்வேறு ஊடகங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் அங்கு திரண்டிருந்தனர். அவர்கள் ஜே.வி.பியினருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியதுடன் அரசியல் படுகொலைகளையும் கண்டித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஜே.வி.பியினருக்கு எதிராக மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை வைத்திருந்தனர். அவர்கள் அங்கு எழுப்பிய கோஷங்கள் வருமாறு:-

''ஜே.வி.பிக்கு எதிராக ஊடகத்துறை அமைச்சரே நடவடிக்கை எடுங்கள்'', ''ஜே.வி.பியே ஊடகவியலாளர்களைச் சீண்டாதே'', ''ஊடகவியலாளர் யதுர்ஷனைத் தாக்கிய ஜே.வி.பி. உறுப்பினர்களை உடன் கைது செய்'' ''ஊடகவியலாளர் யதுர்ஷனைத் தாக்கிய ஜே.வி.பி. உறுப்பினர்களை உடன் கைதுசெய்'', ''அவசரகாலச் சட்டத்தைப் பயன் படுத்தி பத்திரிகையாளர்களைக் கைது செய் யாதே'', ''பத்திரிகையாளர் ரமேஷை விடு தலைசெய்'', ''ஜே.வி.பியே நீ என்ன பொலீஸா'', ''பால்ராஜ், நடேசன், ரேலங்கி படுகொலைகள் பற்றி இன்னும் ஏன் மௌனம்'' ஆகிய கோஷங்கள் அங்கு உரத்து ஒலித்தன. அதே வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் பத் திரிகையாளர்கள் தாங்கியிருந்தனர்.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், ஊடக ஊழியர் தொழிற் சங்க சம்மேளம் என்பன இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துநடத்தின.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பொதுக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் சார்பில் அதன் தலைவர் அனந்த பாலகிருஷ்ணன் உரையாற்றினார். ஊடகவியலாளர்கள் மீதான அராஜகங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (ஐ)

# இந்த ஆண்டிலேயே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலம் எப்போது ஆரம்பமாகிறது என்பதை உயர் நீதிமன்றம் தெளிவாகக் கூறிவிட்டது. 1999ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தேர்தல் நடத்தப்பட்ட 22ஆம் திகதியில் இருந்தே ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாகிறது என்று நேற்று தெளிவுபடுத்தியது உயர் நீதிமன்றம்.

ஜாதிக ஹெல உறுமய தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீது பிரதம நீதியரசர் தலைமையிலான ஐந்து நீதியரசர்களைக் கொண்ட 'பெஞ்ச்' நேற்று ஏகமனதாகத் தீர்ப்பளித்தது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தீர்ப்பை வாசித்தார். 24 பக்கங்களில் அடங்கிய அந்தத் தீர்ப்பை வாசிப்பதற்கு அவர் ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வண. ஓமல்பே சோபித தேரர் இந்த மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகத் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது இரண்டாவது பதவிக்காலத்தை 1999 டிசெம்பர் 22ஆம் திகதியன்று - தேர்தலை அடுத்து - ஆரம்பித்தார் என்றும் -

அவரது முதலாவது பதவிக் காலம் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமானது என்றும்-

அதனடிப்படையில் அவரது பதவிக் காலம் 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதியே முடிவடைய வேண்டும்.

எனினும் ஒரு வருடம் முன்னதாக 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டதால், அரசமைப்புப்படி தேர்தல் நடத்தப்பட்ட 22ஆம் திகதியில் இருந்தே அவரது இரண்டாவது பதவிக் காலம் ஆரம்பிக்கின்றது என்றும் - உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் மிகத் திட்டவட்டமாக விளக்கியுள்ளது.

மக்கள் தமது வாக்குகளால் தெரிவுசெய்யும் ஜனாதிபதி ஒருவர் அரசமைப்புப்படி 6 ஆண்டுகளே பதவியிலிருக்க முடியும் என்றும் - தேர்தல் ஒன்றில் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியின் பதவிக்காலம் அவர் தெரிவு செய்யப்பட்ட தினத்தில் இருந்தே ஆரம்பமாகிறது என்றும் - தீர்ப்பில் விளக்கமளித்தார் பிரதம நீதியரசர். அதனடிப்படையில், அரசமைப்பின் படி தற்போதைய ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலத்தைக் கணித்து அது முடிவடையும் போது அடுத்த தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் எடுக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், இந்த மனு பொதுமக்களின் நலன் கருதித் தாக்கல் செய்யப்பட்டது என்பதால், அடிப்படை உரிமை மீறல் மனுவாக இருந்தபோதும் அதற்கான செலவுத் தொகையை மனுதாரர்களுக்குச் செலுத்த வேண்டியதில்லை என்றும் நீதியரசர் தீர்ப்பில் கூறியுள்ளார்.(ஐ-க)

# தேர்தல் திகதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசுகளைக் கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு உயர்நீதிமன்ற வளாகத்தில் ஒன்று திரண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள், குணசிங்கபுரத்திலுள்ள அமரர் ரணசிங்க பிரேமதாஸாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர். ''ரணிலுக்கே வெற்றி'' என்றும் கோஷமிட்டனர்.

உயர்நீதிமன்றத்தின் அறிவிப்பினையடுத்து, அரசின் முக்கிய அமைச்சர்கள் பலர் நாடாளுமன்றத்தில் ஒன்றுகூடி ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து நீண்ட நேரம் ஆராய்ந்திருக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான கால எல்லை உறுதியானதையடுத்து சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் இரு பிரதான கட்சிகளும் ஈடு பட்டுள்ளதாகத் தெரிகிறது.

(ஐ-க)

# கதிர்காமரின் மரணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சந்திரிகா அம்மையாரின் சமாதானத்திற்கான போர் என்ற இராணுவ சித்தாந்தத்தை சர்வதேச நாடுகள் சிலவற்றில் வெற்றிகரமாகச் சந்தைப்படுத்திய விற்பனை முகவராக லக்ஷ்மன் கதிர்காமர் செயற்பட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் என்ற பெயருடன் உலகவலம் வந்த கதிர்காமர் உண்மையில், சர்வதேச அரங்கில் தமிழர் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்துவதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சராகவே தொழிற்பட்டிருந்தார்.

தமிழர் தாயகத்தில் சிங்களப் படைகள் நடத்திவந்த தமிழ் இனப் படுகொலைகளையும் - தமிழரின் போராட்ட நியாயங்களையும் சர்வதேசத்திற்கு மறைத்ததில் பெரும் பங்கு வகித்தவர் கதிர்காமர். ஒருசில படுகொலைகளை உலகிற்கு அம்பலப்படுத்திய சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களைக் கடுமையாகக் கண்டித்த கதிர்காமர், அவ்வாறான படுகொலைகள் இங்கே நடக்கவேயில்லையென்றும் மறுப்பறிக்கைகள் வெளியிட்டிருந்தார்.

புலிகள் இயக்கம்தான் பயங்கரவாதச் செயல்களைப் புரிந்துவருகின்றது என்று பொய்ப் பிரசாரங்கள் செய்து சில நாடுகள் புலிகளைத் தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கமாக அறிவிக்கவும் முன்னின்று உழைத்திருந்தார்.

இவை காரணமாக சிங்களப் பேரினவாதிகளின் செல்லப்பிள்ளையாக கதிர்காமர் விளங்கி வந்தர். ஆனால், இந்த மூன்றரை ஆண்டு சமாதான சூழலும், அந்தக் காலப்பகுதியில் புலிகள் நடத்திய அரசியல் வேலைகளும் கதிர்காமர் செய்த முன்னைய வேலையை, சர்வதேச மட்டத்தில் அர்த்தமிழக்கச் செய்துவிட்டன.

போர் நடந்த காலத்தில் தமிழர் தாயகத்தில் சிங்களப் படைகள் எவ்விதம் நடந்துகொண்டன என்ற உண்மைகளையும், தமிழரின் ஆயுதப் போராட்டத்திற்கான அரசியல் நியாயங்களையும், புலிகள் இயக்கம், சர்வதேச சமூகத்திற்கு நேரடியாகவே விளக்கியது. அத்துடன், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் மனநிலையுடன் சிங்கள அரசு இல்லை என்ற உண்மையையும் புலிகள் இக்காலப்பகுதியில் விளக்கியுள்ளனர். இப்போது, புலிகள் இயக்கத்திற்கும் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கும் சர்வதேச ஆதரவு பெருகி வருகின்ற யதார்த்தம் பிறந்துள்ளது. இத்தகைய அரசியற் புறச் சூழலில் கதிர்காமரின் தேவை சிங்களப் பேரினவாதத்திற்குத் தேவையாகிவிட்டது.

இந்த நிலையிலேயே கதிர்காமர் கொல்லப்படுகின்றார். அதுவும், மிகுந்த பாதுகாப்பின் மத்தியில் இருந்த கதிர்காமர் இருள்சூழ்ந்த இரவில் - அவரது இல்லத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

கொலையாளி யார் என்பது நிரூபிக்கப்படவில்லை. ஊகத்தின் அடிப்படையில் புலிகளை நோக்கி அரசு குற்றச்சாட்டுக்களைத் தொடுத்துள்ளது.

கடந்த மூன்றரை வருடகாலமாக சிங்கள அரசுடன் புலிகள் இயக்கம் நடத்திவந்த அரசியல் சமரில் புலிகள் இயக்கம் வெற்றிக்கனி பறித்து இப்போது சர்வதேச ரீதியில் மதிப்புடன் காணப்படுகின்றது.

இந்தச் சர்வதேச மதிப்பைச் சிதைக்கும் அரசியல் சூழ்ச்சியுடனேயே கதிர்காமரின் கொலைக்கான பழியைப் புலிகள் இயக்கம் மீது சிங்கள அரசு சுமத்த முனைகின்றது.- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரை நேற்றுச் சந்தித்தார்.

முதலில் இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்தபோது இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து விளக்கிக் கூறினார் அமைச்சர் பண்டாரநாயக்க. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து நடைபெறவுள்ள பேச்சுக்கள் பற்றியும் விவரித்தார்.

இலங்கையில் தடைப்பட்டுப் போயுள்ள அமைதி முயற்சிகளை முன்னெடுக்க இந்தியா வழங்கவேண்டிய ஆதரவு தொடர்பிலும் அமைச்சர் இந்தப் பேச்சுகளின் போது ஆராய்ந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதி - பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டிருக்கிறது.

தற்போதுள்ள சூழ்நிலைக்கமைய நாடாளுமன்றத்தைத் கலைத்து பொதுத்தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலுடன் நடத்துவது தொடர்பாக நேற்றைய பேச்சுவார்த்தையின் போது முக்கியமாக கலந்துரையாடப்பட்டதாக ஜனாதி பதி மாளிகை வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது. (ஐ-க)

# இரத்ம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட பகுதி மற்றும் மலையகத்தைச் சேர்ந்த 16 யுவதிகள் உட்பட 46 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர். இவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 12 யுவதிகள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இணையத்தளம் ஒன்று தெரிவித்தது. (ஐ-க)


# மரண அறிவித்தல்

## திருமதி தியாகராஜா சரஸ்வதி தேவி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராஜா சரஸ்வதிதேவி அவர்கள் நேற்று (26.08.2005) வெள்ளி இரவு 10.45 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2005) சனிக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் த்கனக்கிரியைக்காக ஊத்தல் இந்துமயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி.தயாமதி (மகள் - ஆசிரியர், வீரசிங்கம் ம.வி. மீசாலை).

கைதடி வடக்கு,
கைதடி.

(39368) (38-11-34)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org